பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

# வலம்புரி

The Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | ஆடி 06 | செவ்வாய்க்கிழமை (22.07.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 215

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது

ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

## தனிநாடு அமைப்பதே புலிகளின் இலக்கு

# இலங்கை இன விவகாரத்தில் இந்தியா தலையிட வேண்டும்

### முன்னாள் தூதுவர் ஜே.என்.டிக்ஷித் தெரிவிப்பு

(நமது நிருபர்)

**தனிநாடு ஒன்றை அமைக்காமல் தமிழரின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க முடியாது என்பதே விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு. இதற்கு அமைவாகவே நோர்வேயின் சமாதான முயற்சிகளும், கண்காணிப்புக் குழுத் தலைவரின் திட்டங்களும் அமைந்துள்ளன. இந்நிலையில் இலங்கை இன விவகாரத்தில் இந்தியா தலையிட வேண்டிய தேவையுள்ளது.**

**இவ்வாறு இலங்கைக்கான முன்னாள் இந்தியத் தூதுவர் ஜே.என்.டிக்ஷித் தெரிவித்துள்ளார். ஐ.ஏ.என்.எஸ். செய்திச் சேவைக்கு டிக்ஷித் வழங்கிய பேட்டியின் முழு விபரமும் வருமாறு:-**

இலங்கையின் சமாதானப் பேச்சுக்கள் முடக்க நிலைக்கு வந்துள்ளன. முயற்சிகளில் முக்கிய திருப்பங்கள் ஏற்பட்டுள்ளன. அடிப்படை விவகாரங்கள் பற்றி பேசப்படவேண்டியிருக்கும் கட்டத்திலேயே இந்தத் தடங்கல் நிலை ஏற்பட்டுள்ளது. இது பற்றி இந்தியாவுக்கு சகல தரப்பினரும் தெரிவித்துள்ளனர். ஜனாதிபதி குமாரதுங்க, அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் புதுடில்லிக்கு வந்திருந்தனர்.

சமாதானப் பேச்சுக்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கவில்லை. புலிகள் 1933 இல் இருந்து பல போர் நிறுத்தங்களில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### நிரந்தர சமாதானம் ஏற்பட்டதும்

# உயர் பாதுகாப்பு வலய இராணுவம் வெளியேறும்

### பிரிகேடியர் சரத் கருணாரட்ண தெரிவிப்பு

(நமது நிருபர்)

**நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட்டதும் அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் அடங்கியுள்ள நிலப்பரப்பை அவற்றின் சொந்தக்காரர்களிடம் கையளித்துவிட்டு இராணுவம் அப்பகுதிகளில் இருந்து வெளியேறிவிடும். இவ்வாறு இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் கருணாரட்ண தெரிவித்துள்ளார்.**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் கலந்துரையாடல் நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பிரிகேடியர் சரத் கருணாரட்ண மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அக் கலந்துரையாடலில் அவர் தொடர்ந்து கூறுகையில்,

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் நாட்டில் ஏற்பட்டுள்ள தற்போதைய சமாதான சூழ்நிலை தொடரும் என நான் நம்புகிறேன். கடந்த 2000ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் பாரிய பீரங்கிகள் மூலம் தாக்குதல்களை நடத்தியிருப்பினும், அவர்களை சாதாரண பொது மக்களிடம் இருந்து இனங்கண்டு கொள்வது கஷ்டமாக

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. அம்பாறையில் நேற்று பூரண ஹர்த்தால்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பெருமன்றம் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருந்தது. இன்று செவ்வாய்க்கிழமையும் இம் மாவட்டங்களில ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

மட்டக்களப்பு சேற்றுக் குடாவில் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டமை, சந்தேகத்தின் பேரில் தொடரும் பொலிஸாரின் கைது நடவடிக்கைகள் மற்றும் வீதிச் சோதனைகள் ஆகியவற்றினால் இயல்பு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## திருக்கோயில் கடலில் மர்மக் கப்பல்

### திருமலை துறைமுகத்தில் சோதனை

(மட்டக்களப்பு)

அம்பாறை திருக்கோவில் கடலில் நங்கூரமிட்டிருந்த மர்மக் கப்பல் ஒன்று கடற்படையினரால் திருகோணமலைத்துறைமுகத் திற்குக் கொண்டு செல்லப்பட்டு சோதனையிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினமிரவு 7.15 மணியளவில் திருக்கோவில் கரையோரத்திலிருந்து 5கடல் மைல் தொலைவில் அவதானிக்கப்பட்ட இந்தக் கப்பலைக் கண்காணிக்கும் நடவடிக்கையில் விமானப் படையினர் உட

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால சபை நிர்வாகத்தில் பொ.ஐ.முன்னணியில் ஒருவரா?

### ஏற்கமுடியாது என்கிறார் சரத் அமுனுகம

(கொழும்பு)

வடக்கு கிழக்கு இடைக்கால நிர்வாக சபைக்குப் பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர் ஒருவரையும் நியமிப்பது தொடர்பான அரசாங்கத்தின் யோசனையை அங்கீகரிக்க முடியாது என்று பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் அனுமதி இன்றியே விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தை வழங்குவதற்கான ஆலோசனையை அரசாங்கம் முன்வைத்துள்ளது. இவ்வாறானதொரு நிலையில் பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர் ஒருவரை நியமிக்க அரசாங்கத்திற்கு எதுவித உரிமையும் இல்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் அனுமதியின்றி விடுதலைப் புலிகளுக்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை வழங்குவது அரசியல் அமைப்புக்கு முரணானது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(த-3)

## புலி உறுப்பினர் இருவரை இராணுவம் தாக்கியது

### வாழைச்சேனையில் சம்பவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனையில் விடுதலைப் புலிகளின் பிரதேசப் பொறுப்பாளர் ஒருவர் உட்பட இருவர் நேற்றிரவு 9.45 மணியளவில் இராணுவத்தினரால் தாக்கப்பட்டுள்ளனர். இராணுவத்தினரின் துவக்குப் பிடியினால் தாக்கப்பட்ட இவர்கள் இருவரும் தலையில் படுகாயமடைந்த நிலையில் வாழைச்சேனை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, இராணுவத்தினரால் தாக்கப்பட்ட இருவரும் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக வெளியான தகவலை அடுத்து. அங்கு திரண்ட 200றகும் மேற்பட்ட

(10 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். குடாநாட்டுக்கு புதிய படைத்தளபதி

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டின் புதிய படைத்தளபதியாக மேஜர் ஜெனரல் தர்மி குலதுங்கா இம்மாதம் 25 ம் திகதி முதல் நியமிக்கப்படவுள்ளார்.

யாழ்.குடாநாட்டின் இராணுவத் தளபதியாக இருக்கும் மேஜர் ஜெனரல் சரத பொன்சேகா அடுத்த மாதம் முதலாம திகதி வெளிநாடு செல்லவிருப்பதாலேயே மேஜர் ஜெனரல் தர்மி குலதுங்கா அவரின் இடத்துக்கு நியமிக்கப்படவுள்ளார்.எனினும் இவரது நியமனம் தற்காலிகமானதா? நிரந்தரமானதா என்ற தகவலகள் எதுவும வெளியிடப்படவில்லை. (வ)



யாழ். மாநகர சபையின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும்உள்ளூராட்சி வாரஇறுதி நிகழ்வில் இ.இராமலிங்கம் உரையாற்றுவதையும் ஆரம்ப பராமரிப்பு என்னும் மேடை நாடக நிகழ்வு சுகாதாரப் பிரிவினரால் நடாத்தப்படுவதையும் படங்களில் காணலாம்.

# பிரான்ஸ் நாட்டு பாதுகாப்பு அதிகாரி கண்காணிப்புக் குழுவுடன் நேற்று சந்திப்பு

(மட்டக்களப்பு)

இலங்கைக்கான ஒரு வாரகால விஜயத்தை மேற்கொண்டுள்ள பாகிஸ்தானிலுள்ள பிரான்ஸ் தூதுவராலயத்தின் பாதுகாப்பிற்கான பொறுப்பதிகாரி கேணல் ஜோன் பிர்ரே செஸ்னெக் நேற்று முன்தினம் முதல் மட்டக்களப்பில் தங்கிநின்று கள நிலைவரம் குறித்து ஆராய்ந்து வருகிறார்.

பாகிஸ்தான், இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளில் உள்ள பிரான்ஸ் தூதுவர் ஆலயத்தின் பாதுகாப்பிறகுப் பொறுப்பான இவர், வடக்கு கிழக்கு மாகாணங்களின் தற்போதைய நிலைவரம் குறித்து ஆராய்வதற்காகவே இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

கொழும்பிலுள்ள பிரான்ஸ் தூதுவராலய இராஜதந்திரிகளுடன் இந்த மட்டக்களப்பு விஜயத்தை மேற்கொண்டுள்ள இவர், சிவில் மற்றும் படை அதிகாரிகள், இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் சமூக, சமயப் பிரமுகர்கள் உட்பட பல்வேறு தரப்பினரையும் சந்தித்து தற்போதைய நிலைவரம் குறித்து விவரமாகக் கேட்டறிந்து வருகின்றார்.

நேற்று முன்தினம் மின்னேரியாவில் உள்ள 23 ஆவது படைப் பிரிவுக் கட்டளைத் தலைமையகத்தில் கட்டளை அதிகாரி கேணல் ரஞ்சித் பாலசூரியவை சந்தித்து பின்பு புனானை இராணுவ முகாமுக்கு விஜயம் செய்தார்.

நேற்று மட்டக்களப்பில் இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பரதிநிதிகள், மாவட்ட அரசாங்க அதிபர் இ.மோனகுருசாமி, 223 ஆவது படைப்பிரிவு கட்டளை அதிகாரி கேணல் ராஜித சில்வா, ஆயர் வணக்கத்திற்குரிய கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆகியோரையும் சந்தித்துள்ளார்.

ஆயருடன் இடம்பெற்ற சந்திப்பில், சமாதானம் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை தொடர்பாக இவர் கேட்டபோது, இருதரப்புக் கருத்துக்களும் மக்களுக்கு யுத்தம் இனி மீண்டும் ஏற்படாது என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியிருந்தாலும், பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான அரசியல் யாப்பு தொடர்பாக சர்ச்சை சமாதானத் தீர்வுக்கு சட்டரீதியான தடைகளை ஏற்படுத்தலாம் என்ற அச்சம் மக்களிடம் இருப்பதாகவும் ஆயர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு விஜயத்தை முடித்துக்கொண்டு இன்று கொழும்பு திரும்பும் இவர் அடுத்த கட்டமாக யாழ். மாவட்டத்திற்கு விஜயம் செய்யக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(உ)

# 21 வருட தாயக மீட்பு போரில் 16,407 வீரவேங்கைகள் களப்பலி

## "வழிகாட்டி" அறிக்கையில் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் 1982 ஆம் ஆண்டுமுதல் 2003ஆண்டு ஜுன் மாதம் 30ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 16,407 தமிழீழ விடுதலைப் புலிகள் வீரமரணம் அடைந்துள்ளதாக தமிழீழ அரசியல் துறையினரின் அரச அறிவியல் கல்லூரி வெளியிட்டுள்ள "வழிகாட்டி" அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

1982 ஆம் ஆண்டில் முதலாவது மாவீரர் களப்பலியாகியிருக்கின்றார். தொடர்ந்து 1983 இல் 5 மாவீரர்களும், 1984 இல் 36 மாவரர்களும் 1985இல் 123 மாவீரர்களும் 1986 இல் 258 மாவீரர்களும், 1987 இல் 451 மாவீரர்களும் 1988இல் 363 மாவீரர்களும் 1989 இல் 372 மாவீரர்களும், 1990இல் 961 மாவீரர்களும், 1991இல் 1614 மாவீரர்களும் 1992 இல் 787 மாவீரர்களும் 1993இல் 925 மாவீரர்களும் 1994இல375 மாவீரர்களும் 1995இல் 1505 மாவீரர்களும் 1996இல் 1376 மாவீரர்களும் 1997இல் 2107மாவீரர்களும் 1998 இல் 1797 மாவீரர்களும் 1999இல் 1545 மாவீரர்களும் களப்பலியாகியுள்ளனர். தொடர்ந்து 2000 இல் ஆயிரத்து 980 மாவீரர்களும் 2001 இல் 759 மாவீரர்களும் 2002 இல் 38 மாவீரர்களும் 2003 இல் ஜுன் மாதம் 30ஆம் திகதி வரை 30 மாவீரர்களும் களப்பலியாகியுள்ளனர்.

இவை தவிர 280 எல்லைப் படை வீரர்களும் இக்காலப் பகுதியில் உயிரிழந்துள்ளதாகவும் அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ-10)



## சிறுவிளம்பரம்

### விற்பனைக்கு

கொக்குவில், திருநெல்வேலி சந்திகளுக்கிடையில் கொக்குவில் ஆடியபாதம் வீதியில் மிகவும் நல்ல சுற்றாடலில் வீடு கட்டுவதற்கு ஏற்ற 4½ பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: விளம்பர இல-389, மே/பா வலம்புரி, யாழ்ப்பாணம். (7280)


# தென்மராட்சியில் மிதிவெடி அகற்றப்பட்ட பிரதேசம் ரொங்கோ குழுவினால் நேற்று ஒப்படைப்பு

(தென்மராட்சி)

அமெரிக்க அனுசரணையிலான ரொங்கோ குழுவினரால் தென்மராட்சியின் சரசாலைப் பகுதியில் கடந்த 3 மாத காலமாக மிதிவெடி அகற்றப்பட்ட 72 ஆயிரம் சதுர மீற்றர் விஸ்தீரணம் கொண்ட நிலப்பரப்பு அமெரிக்க மிதிவெடியகற்றும் நிபுணர் டொன் ஸ்மித்தினால் தென்மராட்சிப் பிரதேச செயலரின் பிரதிநிதி கோ.பாலசுப்ரமணியத்திடம் நேற்று உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

சரசாலை மத்தி சனசமூக நிலையத்தில் யாழ். மாவட்ட மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலக அதிகாரி எஸ்.செந்தில்குமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், சரசாலை மத்தி கிராம அலுவலர் எஸ்.ரூபேந்திரன் மற்றும் பெருமளவு பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மிதிவெடி அகற்றப்பட்ட பிரதேசம் உள்ளிட்ட விபரங்கள் அடங்கிய ஆவணத்தை பிரதேச செயலரின் பிரதிநிதியிடம் கையளித்து உரையாற்றிய அமெரிக்க மதிவெடியகற்றும் நிபுணர் டொன் ஸ்மித்,

ரொங்கோ நிறுவன மிதிவெடியகற்றும் பணியாளர்கள், மோப்ப நாய்களைப் பயன்படுத்தி 320 தனிநபர் மிதிவெடிகள் மற்றும் வெடிக்காத மிதிவெடிகளை இப்பிரதேசத்தில் மீட்டுள்ளனர்.

எமது பணிக்கு சரசாலைப் பகுதி மக்கள் அளித்த ஒத்துழைப்பு அபாரமானது.

நாம் பல்வேறு நாடுகளிலும் வெடிப் பொருட்களை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளோம். ஆனால் தென்மராட்சியில் எமக்குக் கிடைத்தது போன்ற ஆதரவும் ஒத்துழைப்பும் வேறெங்கும் கிடைக்கவில்லை என்றார்.

இதேவேளை, யாழ். குடாநாட்டில் மிதிவெடியகற்றும் பணிகளுக்கு அமெரிக்க அரசு 5 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்க முன்வந்துள்ளது.

ரொங்கோ குழுவின் ஒப்பந்த காலம் கடந்த 30ஆம் திகதியுடன் முடிவடைந்ததையடுத்து இந்நிதியைக் கொண்டு ரொங்கோ குழுவினர் இலங்கைப் படையினரின் மிதிவெடியகற்றும் பொறியியல் பிரிவுடன் இணைந்து எதிர்வரும் மாத நடுப்பகுதியில் தமது பணிகளை ஆரம்பிக்கவுள்ளனர்.

குறித்த நிதி மூலம் இலங்கைப் படையின் பொறியியல் பிரிவுக்கு மிதிவெடியகற்றும் நவீன பயிற்சிகள் வழங்கப்படுவதுடன், அம்புலன்ஸ் வண்டிகள் மற்றும் தேவையான வாகனங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

ரொங்கோ குழுவின் முதற்கட்ட மிதிவெடியகற்றும் பணிகள் கடந்த வருடம் மே முதல் ஒக்ரோபர் வரை சரசாலை வடக்கு மற்றும் தெற்குப் பிரதேசங்களில் இடம்பெற்றதும், இதன்போது 95 ஆயிரம சதுர மீற்றர் நிலப்பரப்பில் ஆயிரத்து 110 வெடிப் பொருட்கள் மீட்கப்பட்டு அழிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (உ-77)

# இலங்கைத் தமிழரின் இமாலய சாதனை

(யாழ்ப்பாணம்)



உயிர்காக்க உதவும் புதிய ரக 'ரீ-சேர்ட்' வகை ஆடையொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இரத்தஅழுத்தம், இதயத்துடிப்பு, ஒட்சிசன் அளவு, உடல் வெப்ப அளவு உட்பட உடலின் சகல இயக்கத்தையும் அளவிடக்கூடிய இப்புதிய ரீசேர்ட்டை அமெரிக்காவில் வாழும் தமிழரான 55 வயதுடைய ஜே.சுந்தரேசன் என்பவர் உருவாக்கியுள்ளார்.

சாதாரண உடல் இயக்கத்தில் இருந்து ஏதாவது ஒரு சிறு மாறுதல் ஏற்பட்டாலும் இவ்வாடையை அணிந்திருப்பின் உடல் இயக்க மாற்றம் தொடர்பான எச்சரிக்கை சமிக்ஞை செய்து பாதிக்கப்பட்டவருக்கு உடனடிச் சிகிச்சை செய்வதற்குரிய உயிர் காக்கும் உன்னத செயற்பாட்டை இப்புதிய ரீசேர்ட் செய்கிறது.

இப்புதிய ரீசேர்ட் புல்லட் ப்ரூ..ப் உடைபோன்று மிகவும் தடிமனாகவோ அணிவதற்குச் சிரமமாகவோ இருக்காது. நாம் அன்றாடம் அணியும் சாதாரண ரீசேர்ட் போன்று மெல்லியதாக எடை குறைவானதாகவே இருக்கும்.

இந்த உயிர் காக்கும் ஆடையை தான் உருவாக்கியதற்கு முதற் காரணம் போர்க்களத்தில் அடிபட்டுக் கிடக்கும் அமெரிக்க வீரர்களுக்கு உரிய நேரத்தில் சிகிச்சை அளிக்கும் உயிர் காக்கும் உன்னத நோக்கமே என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

தனது அடுத்த புதிய தயாரிப்பு புகைப்படக் கருவியை உள்ளடக்கிய ரீசேர்ட் உருவாக்குவது என்றும், அதை உருவாக்கும் முயற்சிகளில் தற்போது ஈடுபட்டு வருவதுடன், விரைவில் அப்பணிகள் முடிவடையும் எனவும் அவர் கூறியுள்ளார்.

தற்போது தயாரித்துள்ள இந்த உயிர் காக்கும் ஆடையின் விலை 250 அமெரிக்க டொலர்கள் மட்டுமே. (உ-18)

# பிரதமரின் பணிப்பின் பேரில் இன்று உயர்மட்ட மாநாடு

(கொழும்பு)

2003ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிட்டவாறு எதிர்பார்க்கப்பட்ட அளவு வரி மூலமான வருமானத்தைப் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதையடுத்து அதனை நிவர்த்திக்கக்கூடிய மாற்று வழியோசனை குறித்து ஆராயும் வகையில் திறைசேரியில் இன்று உயர்மட்ட மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது.

வரிசேகரிப்பில் ஏற்பட்ட பின்னடைவை நிவர்த்திக்க வேண்டிய வழிமுறைகளை உடன் ஆராயுமாறு அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுத்த விசேட பணிப்புரையினையடுத்தே இன்று இந்த மாநாடு இடம்பெறவுள்ளது.

நிதி அமைச்சர் கே.என்.சொக்ஸி தலைமை தாங்கும் இம்மாநாட்டிற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் உட்பட திறைசேரியின் கீழ்வரும் அனைத்து நிறுவனங்களின் தலைவர்களும் பங்குகொள்ள வேண்டுமென திறைசேரி பணிப்புரை விடுத்துள்ளது.

இதேவேளை, திறைசேரி திரட்டத் தவறியிருக்கும் சுமார் 72 மில்லியன் ரூபா பெறுமதியான வரி வருமானத்தை வேறு விசேட வரியொன்றை அறிமுகப்படுத்தி அதன் மூலம் பெற உத்தேசித்திருக்கும் நிலையில் இதுபற்றி இன்றைய கூட்டத்தில் விரிவாக ஆராயப்படும் எனக் கூறப்படுகின்றது.

2003ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின்படி இறக்குமதி, உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகளில் இருந்து பெறுமதி சேர்க்கப்பட்டவரியாக 120 மில்லியன் ரூபா திரட்ட தீர்மானிக்கப்பட்டிருந்தும் இந்த வருடத்தின் முதல் 6 மாத காலத்தில் வற்வரியாக 48 மில்லியன் ரூபா மட்டுமே திரட்டப்பட்டிருக்கின்றதும், ஆறுமாத காலத்தில் எதிர்பார்த்த தொகையை விட 12 மில்லியன் ரூபாவினால் வருமானம் குறைந்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கவை. (உ-10)

# 420 வெளிநாட்டவர்கள் இம்மாதத்தில் கைது

(கொழும்பு)

கடந்த 20 நாட்களில் இலங்கையூடாக சட்டவிரோதமான முறையில் இத்தாலி செல்ல முயன்ற 489 வெளிநாட்டவர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கண்டியில் உள்ள இரு வீடுகளில் வைத்து நேற்றுமுன்தினம் 114 வெளிநாட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 83 இந்தியர்களும், 22 பாகிஸ்தானியர்களும், 9 பங்களாதேஷ் நாட்டவர்களும் அடங்குவர்.

சட்டவிரோதமான முறையில் இலங்கையூடாக வெளிநாடு செல்ல முயலும் வெளிநாட்டவர்கள் தொகை அண்மைக் காலமாக அதிகரித்து வருவதை அடுத்து, கைது செய்யப்பட்டவர்கள் மீது பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்விசாரணைகளின் அடிப்படையில் சட்டவிரோதமான முறையில் வெளிநாடுகளுக்கு அனுப்பும் முயற்சியில் இந்தியர் ஒருவர் செயற்படுவதாகவும், இவ்வெளிநாட்டவர்களிடம் இருந்து தலா 3முதல் 4 இலட்சம் ரூபா நிதி பெறப்பட்டிருப்பதாகவும், தெரியவந்துள்ளது என கண்டிப் பொலிஸ் தலைமையக பரிசோதகர் எட்மன் மகேந்திரா தெரிவித்துள்ளார். (தி)

# வல்லரசுகள் சமாதானக் கரம் நீட்ட எமது ஆயுத, ஆட்பலமே காரணம்

## மகளிர் அரசியல் பிரமுகர் தமிழினி சுவிஸில் உணர்வுமிகு உரை

(சுவிஸ்)

நாங்கள் பலவீனமாக இருந்த நாட்களில் எங்களை நோக்கி எந்தச் சமாதானக் கரமும் நீளவில்லை. இன்று நாம் பலம் பெற்று, வல்லரசு நாடுகளே எமது திறமையைக் கண்டு வியக்கும் அளவிற்கு வந்தமையினாலேயே சமாதானத்தின் கரங்கள் எமை அழைத்துள்ளன.

இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி அண்மையில் சுவிஸில் நடைபெற்ற கறுப்பு யூலை நினைவு தினக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

நாட்டில் இடம்பெற்ற ஒவ்வொரு இனப் படுகொலைகளின் பின்னணியிலும் ஆக்கிரமிப்பாளர்களின் கரங்கள் உள்ளன. எமது உடைமைகள் சிதைக்கப்பட்டதைத் தவிர உணர்வுகளை மழுங்கடிக்க முடியவில்லை.

ஆனால், எமது மக்களின் நெஞ்சங்களில் கொழுந்து விட்டு எரிந்த உணர்வை அதன் மூலமாக வளர்த்து வந்த விடுதலை நெருப்பை எவராலும் எதுவும் செய்ய முடியவில்லை.

எமது மக்கள் உலகின் பல திசைகளிலும் வாழ்ந்துகொண்டிருக்கின்ற போதும் அவர்களின் எண்ணங்கள், சிந்தனைகள், தாயகத்தை நோக்கியதாகவே இருக்கின்றன. காரணம் அவர்கள் தாயகத்தை நேசிக்கிறார்கள்.

இன்று நாங்கள் கறுப்பு யூலை நிகழ்வில் கலந்துகொண்டிருக்கின்றோம் என்பதால் எங்கள் மனங்களில் மாறாத வடுக்களாகப் பதிந்து போயுள்ள 1983ஆம் ஆண்டு யூலை மாதம் இடம்பெற்ற கொடுமை, அப்போது பறிபோன உயிர்கள், அதற்குப்பின்னர் இடம்பெற்ற இனப் படுகொலைகளில் சரிந்துபோன எமது மக்களின் உயிர்கள் பற்றி ஒரு தடவை சிந்தித்துப் பார்க்கிறோம்.

1983ஆம் ஆண்டு சிங்கள தேசத்தின் தலைநகரிலே அப்பாவித் தமிழ் மக்கள் பேரினவாதிகளால் மேற்கொண்ட இன வெறியாட்டத்தில் சிக்குண்டு பலியாகிப்போன சம்பவத்தை எந்தவொரு தமிழனும் மறக்கக் கூடாது.

அந்த நேரத்தில் தமிழ் மக்கள் போராட்டம் நடத்தவில்லை. ஆயுதம் ஏந்தவில்லை. இதனால் தமிழ் மக்களை எதையும் செய்யலாம் என்ற எண்ணம் சிங்களவர்களிடம் இருந்தது. அத்துடன் அந்தக் காலங்களில் தமிழ் மக்களின் கரங்கள் பலமிழந்து காணப்பட்டன. தமிழர்களின் குரல்கள் பலமற்றதாக இருந்தன. இதனால் வீதி வீதியாக தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்நிலையில், எமது தேசியத் தலைவர் வே.பிரபாகரன் விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்தார். அகிம்சைப் போராட்டத்தால் தமிழர் உரிமைகளைப் பெற்றுக்கொள்ளாத நிலையில் சரிவர இயங்காத கைத்துப்பாக்கிகளுடன் எமது ஆயுதப் போராட்டம் ஆரம்பமாகியது.

எமது விடுதலைப் போராட்டத்தை வழிநடத்திவந்த எமது தலைவரும் போராட்டத்தில் வழிநடக்கின்ற போராளிகளும் கடந்து வந்த பாதைகள் மிகவும் பயங்கரமானவை.

நாங்கள் நீந்திக் கடக்கப்போவது நெருப்பாறு என்பது எனக்குத் தெரியும். ஆனாலும் மக்கள் என்னும் கவசம் எங்களை காப்பாற்றும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது என அப்போது எமது தலைவர் தெரிவித்தார்.

அவரின் இந்த நம்பிக்கை வெற்றியளித்தது. இதனால் போராட்டமும் வெற்றிப்பாதையை நோக்கி நகர்ந்து சென்றது. எமது போராட்டம் வல்லரசு நாடுகளையே அஞ்ச வைக்கும் அளவிற்கு வளரத் தொடங்கியது.

1983ஆம் ஆண்டு 13 இராணுவத்தினரைக் கொலை செய்ததற்கு எமது மக்களில் பலரை கண்மூடித்தனமாகப் படுகொலை செய்த சிங்களவர்கள் 1993ஆம் ஆண்டு ஆயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினரைக் கொலை செய்தபோது அடங்கிப்போய்விட்டனர். அப்போது எமது மக்களைப் பழிவாங்கும் துணிவில்லை. ஏனென்றால் நாம் பலம்பெற்றுவிட்டோம். இனிமேல் எமது மக்களையோ எம்மையோ சீண்டினால் சிங்களவர்களும் கொல்லப்படுவார்கள் என்பது அவர்களுக்கு நன்கு புரிந்துவிட்டது.

இன்று நாங்கள் உலகமே வியந்து பார்க்கின்ற சிறந்த ஒரு இனமாக, வீரம் நிறைந்த இனமாக, ஒரு தாயகத்தை அமைக்கின்ற இறுதி வெற்றிக் களிப்பிலுள்ள இனமாக திகழ்ந்துகொண்டிருக்கிறோம். அன்று சர்வதேச நாடுகள் பலவும் பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தி அரசிற்கு ஆதரவாக செயற்பட்டன. இன்று அந்நாடுகளெல்லாம் சமாதான மேசைக்கு எம்மை அழைத்து உதவிக்கரம் நீட்டி வருகின்றன. இதற்கு எல்லாம் காரணம் எமது பலமே.

எனவே, எமது இனத்தின் பலத்தை மேலும் வலுப்படுத்த எதிர்கால சந்ததியினரை அதாவது உங்கள் பிள்ளைகளை தாயகத்தை நேசிக்கின்ற சக்திகளாக வளர்த்தெடுங்கள் என்றார். (உ-10)


## தரம் 11 மாணவர்களுக்கான

# கட்டுரைப் போட்டி

பாடசாலை மாணவர்களுக்காக மாதமொரு கட்டுரைப் போட்டிப் பரிசில்கள்.

1ஆம் பரிசு ரூபா 750/=
2ஆம் பரிசு ரூபா 500/=
3ஆம் பரிசு ரூபா 250/=

மற்றும் தகுதியான கட்டுரைகளுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

ஈழத்து எழுத்தாளர்

அமரர் கணபதி கணேசன் ஞாபகார்த்தமாக

(செம்பருத்தி பப்ளிகேஷன்ஸ் மலேசியா)

கட்டுரையின் தலைப்பு

**கல்வித்துறையில் கணனியின் பங்கு**

போட்டியின் விதிகள்:

தரம் பதினொன்றில் இப்பொழுது கற்கும் மாணவர்கள் மட்டும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

* கட்டுரை 200தொடக்கம் 250சொற்களுக்குள் அமைதல் வேண்டும்.
* புஸ்காப் தாளில் ஒவ்வொரு தனிப்பக்கத்தில் எழுதப்படல் வேண்டும்.
* கட்டுரைகள் 25.07.2003ற்கு முன்னதாக "மாணவர் கட்டுரைப் போட்டி" வலம்புரி, 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பின்வரும் பத்திரத்தையும் நிரப்பி இணைத்து அனுப்பவும்.

## இணைக்கும் பத்திரம்

## கட்டுரைப்போட்டி இல-6

மாணவர் பெயர்: ..............................

பாடசாலை முகவரி: ..............................

..............................

கற்கும் தரம்: ..............................

உறுதிப்படுத்துகிறேன்

..............................

ஆசிரியர்.

### நோர்வேயைத் தூற்றுவோர் மாற்று மார்க்கத்தை காட்டுவார்களா?

# சமாதான முயற்சிகளில் இந்தியாவை ஈடுபடுத்துமாறு கூறுவது வேடிக்கையானது

## இந்தியப்படையை நாட்டை விட்டு அனுப்பியவர்களே அழைப்பதிலும் ஆர்வம் காட்டுகின்றனர் என்கிறார் பிரதமர்

(கொழும்பு)

**சமாதான முயற்சியில் ஈடுபட்டு வரும் நோர்வேப் பிரதிநிதிகளை உடனடியாக வெளியேறுமாறும் கோருபவர்கள் சமாதான முயற்சிகளை முன்னெடுத்து செல்வதற்கான மாற்று வழிகளைத் தெரிவிக்க வேண்டும்.**

**இதனை விடுத்து தேவையற்றவிதத் தில் ஆர்ப்பாட்டங்களை நடத்தி கோசங்களை எழுப்புவதில் எந்தவித பிரயோசனமுமில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.**

பொலநறுவை மாவட்டத்தில் உள்ள கிங்குராங்கொட என்ற இடத்தில் ஐக்கிய தேசியக் கட்சியினரால் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட சமாதான விளக்கக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு பிரதமர் தொடர்ந்து பேசுகையில். இலங்கையில் தற்போது முனனெடுக்கப்படடுவரும் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுவரும் நோர்வேயினரை வெளியேற்றி, இந்தியாவை இப்பணியில் ஈடுபடுத்தவேண்டும் என சிலர் கூறிவருவது வேடிக்கையாகவே இருக்கிறது.

ஏனெனில், 1987ஆம் ஆண்டு சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக இந்திய அமைதிப்படை இலங்கை வந்தபோது, அதற்கு எதிராகக் குரல் எழுப்பி போராட்டத்தை நடத்தியவர்களே தற்போது மீண்டும் இந்தியாவை அழைக்கும்படி கேட்கின்றார்கள்.

ஆனால், நாட்டில் மீண்டும் ஓர் போரை ஏற்படுத்தி மக்களை பலிக்கடாக்களாக்க அரசு விரும்பவில்லை.

போரினால் இதுவரை 40ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தும் காணாமலும் போயுள்ளனர். ஆனால், புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திய பின்னர் போரினால் பொது மக்கள் எவரும் கொல்லப்படவும் இல்லை. காணாமல் போகவும் இல்லை.

இந்நிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கிழித்தெறியுமாறு கூறிவருவது மிகவும் விசமத்தனமானது. இப்படி அவர்கள் வீணாக அலட்டிக்கொள்வதால் மக்களின் ஆதரவை இழக்கும் வாய்ப்பினைத் தாமாகவே தேடுகிறார்கள் என்பது தான் உண்மை.

பொதுமக்கள் சமாதானத்தையே எதிர்பார்க்கின்றார்கள். அமைதியான வாழ்வைத தேடியே அலைகின்றர்கள் என்பதை இவ்வாறான சுயநலமிக்க அரசியல்வாதிகள் உணர்ந்து கெள்ள வேண்டும் என்றார். (உ-10)

# பல்கலை மோதல்களுக்கு அரசியல் கட்சிகளே பின்னணி

### அமைச்சர் சுஸந்த புஞ்சி நிலமே

(கொழும்பு)

அரசியல் கட்சிகளின் நோக்கங்களைப்பூர்த்தி செய்ய முற்பட்டு, உயிர்களைப் பணயம் வைக்க வேண்டாம் என பல்கலைக்கழக மாணவர்களுக்கு சிறுதோட்ட அபிவிருத்திதிட்ட அமைச்சர் சுஸந்த புஞ்சிநிலமே எச்சரித்துள்ளார்.

இரத்தினபுரியில் கடந்த சனியன்று நடைபெற்ற பல்கலைக்கழக மாணவர்களுக்கு மகாபொல புலமைப் பரிசில்களை வழங்கி வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்,

அவர் அங்கு தொடர்ந்து உரைநிகழ்த்துகையில், பல் கலைக்கழகங்களில் இடம் பெறும் வன்முறைகள். மற்றும் விரும்பத்தகாத சம்பவங்கள் ஆகியவற்றிற்கு சில அரசியல் கட்சிகளே பின்னணியாக விளங்குகின்றன

அத்துடன், மாணவர்களை அரசியல் கேடயங்களாகவும பயன்படுத்தி வருகின்றார்கள் எனவே இவர்களின் நோக்கங்களை பூர்த்தி செய்ய மாணவர்கள் முனைய வேண்டாம் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார். (உ-10)


### யாழ்ப்பாணம் — மாநகரசபை

யாழ்.பண்ணை மீன்சந்தையைக் குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

நிர்ணயித்த ஆகக்குறைந்த கேள்வி ரூ. 500000/-

மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அறியலாம்

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்.

(C/6423)

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.



### கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக மாகாணக்
கல்விப்பணிப்பாளர் திருமதி.செல்வராணி மகாலிங்கம்
அவர்களின் அன்புத்தாயார்

**திருமதி செல்லையா - முத்துப்பிள்ளை**

அவர்கள் மறைவால் துயருற்றிருக்கும் அன்னார் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*''அவர்தம் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்''*

மேலதிக மாகாணக் கல்விப்
பணிமனை அலுவலர்கள்.
யாழ்மாவட்டம்.

[7310]


## விளையாட்டு செய்திகள்

# மானிப்பாய் மற்றும் பல்கலை அணிகள் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகின

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தினரால் நடாத்தப்பட்டு வரும் 30ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெற் சுற்றுப்போட்டிகளில் நேற்றுமுன்தினம் நடை பெற்ற அரை இறுதி ஆட்டங்களில் வெற்றி பெற்று யாழ்பல்கலைக் கழக அணியும், மானிப்பாய் பரிஸ் கழக அணியும் இறு திப் போட்டிக்குத் தெரிவாகி யுள்ளன.

அன்று காலை நடைபெற்ற ஆட்டத்தில் பற்றீசியன் அணியை எதிர்த்து விளையாடிய பல்கலைக் கழ அணி, 36ஓட்டங்களினால் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவானது. இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பல்கலைக்கழக அணியினர் நிர்ணயிக்கப்பட்ட நேரத்துள் 27ஓவர்களை சந்தித்து 187 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

இவ் அணியின் கௌரிபாலன் 71ஓட்டங்களையும், தனஸ்காந்தன் 30ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் சுதேஸ்வரன் 18ஓட்டங்களுக்கு 3விக்கெற்றையும், நைனஸ 19ஓட்டங்களுக்கு 2விக்கெற்றையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன் அணியினர், 26.3ஓவர் முடிவில் அனைத்து விக்கெற்றுக்களையும் இழந்து 151ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

இவ்வணியின் முகுந்தன் 40ஓட்டங்களையும் லோயலா மற்றும் சுதர்சன் தலா 24ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் சுஜீ 22ஓட்டங்களுக்கும், ரொபேசன் 31ஓட்டங்களுக்கும் தலா 2விக்கெற்றுக்களையும் கைப்பற் றினர்.

அன்று மாலை நடைபெற்ற ஆட்டத்தில் கே.சி.சி.சி அணியினை எதிர்த்து விளையாடிய மானிப் பாய் பரிஸ் அணி யினர்5 விக்கெற் வித்தியாசத்தில் கே.சி.சி.சி. அணி யை வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவாகினர்.

முதலில் துடுப்பெடுத்தாடிய கே.சி.சி.சி அணியினர் 25.1 ஓவர்முடிவில் அனைத்து விக்கெற்றையும் இழந்து 128ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டனர்.

இவ் அணியின் ஐங்கரன் 43ஓட்டங்களையும் துஷ்யந்தன் 23ஓட்டங்களையும்பெற்றுக் கொண்டனர்.

பந்து வீச்சில் சாத்வீகன் 16ஓட்டங்களுக்கு 4விக்கெற்றையும், கிசோக்குமார் 25ஓட்டங்களுக்கு 2விக்கெற்றையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஸ் அணியினர் 23.1ஓவர் முடிவில் 5விக்கெற்றுக்களை மட்டும் இழந்து வெற்றி இலக்கான 129 ஓட்டங்க ளைப் பெற்றுக் கொண்ட னர்.

இவ் அணியின் பாஸ்கரன் 43 ஓட்டங்களையும், ஜெயதீபன் 34 ஓட்டங் களையும் பெற்றுக் கொண்டனர். பந்துவீச்சில் பிரகாஸ் 13ஓட் டங்களுக்கு 3 விக் கெற்றுக் களைக் கைப்பற்றினார். (உ-68)

# கவலையில் மூழ்கியுள்ள டெனிஸ் சம்பியன் ஷெரீனா

கலிபோர்னியாவில் இடம் பெறவிருக்கும் ''பெஸ்ற் கிளாசிக்'' கிண்ணப்போட்டிகளின் அமெரிக்க வீராங்கனையான உலக டெனிஸ் சம்பியன் ஷெரீனா வில்லியம்ஸ் பங்கு கொள்ளமாட்டார்.

வலது முழங்காலில் ஏற்பட்டுள்ள உபாதை காரணமாக இப்போட்டிகளில் கலந்து கொள்ள முடியாதுள்ளதாகத் தெரிவித்துள்ள ஷெரீனா, இப்போட்டித் தொடரில் தன்னால் கலந்து கொள்ள முடியாமல் போனமை பற்றி மிகுந்த கவலை தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு வாரங்களின் முன்னர் இங்கிலாந்தில் நடைபெற்ற விம்பில்டன் போட்டியில் ஷெரீனா சம்பியனாகியது இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-68)

# கிளைவ்லொயிட்டின் சாதனை முறியடித்தார் ஸ்ரீவ்வோ

''டெஸ்ட் போட்டிகளில் அதி கூடிய வெற்றிகளைப் பெற்றுக் கொடுத்த தலைவர் என்ற பெருமையை அவுஸ்திரேலிய டெஸ்ட் போட்டிகளின் அணித்தலைவர் ''ஸ்ரீவ்வோ''தனதாக்கிக்கொண்டுள்ளார்.

இவர் பங்களாதேஷிற்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற்றுக்கொண்டுள்ளமையினால் இப்பெருமையை தனதாக்கிக் கொண்டுள்ளார்.

50டெஸ்ட்போட்டிகளுக்கு தலைமை தாங்கியுள்ள இவர் 37 போட்டிகளில் தனது அணியை வெற்றிபெறச்செய்துள்ளார்.

இதற்கு முன்னர் அதி கூடிய வெற்றிகளைப் பெற்றுக்கொடுத்த தலைவர் என்ற பெருமையை மேற்கிந்திய தீவுகளின் முன்னாள் அணித் தலைவர் ''கிளைவ் லொயிட்'' பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவர் 74போட்டிகளுக்கு தலைமைதாங்கி தனது அணியை36 போட்டிகளில் வெற்றி பெறச் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-68)

## கரபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 48ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு மின்னொளி விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்படும் செற்றப் முறையிலான கரப்பந்தாட்டப் போட்டியின் இரண்டாவது நாளான இன்று பி.ப 3.30மணிக்கு பாசையூர் அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் எதிர் காங்கேசன்துறை கே.கே.எஸ். விளையாட்டுக்கழகமும் தொடர்ந்து பி.ப4.30மணிக்கு மட்டுவில் பாரதி விளையாட்டுக்கழகம் எதிர் கோப்பாய் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (உ-10)

# நோய்களைக் குணமாக்கும் "அத்தி இலை" சித்த மருத்துவத்தின் உயிர்நாடி

ஒவ்வொரு ஆலயங்களிலும் உரிய விருட்சம் இருப்பது மரபு. இறைவன் பெயரால் விருட்சத்தின் இலைகளை பிரசாதமாகக் கொடுத்து நோய்களை அகற்றி வந்துள்ளனர் என்பது குறிப்பிடப்பட்டதாகும். சிவன் கோவிலல் வில்வ விருட்சம், சக்திக் கோவல்களில் வேம்பு விருட்சம், திருமாலுக்கு துளசிச்செடி, கணபதி கோவில்களில் அறுகம்புல், பிரம்மனுக்கு அத்திவிருட்சம். ஆன்றோர்களால் வகுத்து பிரசாதமாக வழங்கியுள்ளனர்.

சிவனின் சாபத்தால், பிரம்மனுக்குத் தனியாக கோவில் அதிகம் இல்லை. பல சிவாலயங்களில் பிரம்மன் உள்ளார். அவருக்கு அத்தி இலையால் அர்ச்சனை செய்வது மரபாகும். ஆதலால் இதனை தெய்வீக மூலிகை என்கின்றோம்.

அத்தி மர இனத்தாவரத்தைச் சேர்ந்தது. இம்மரம் வாய்க்கால் ஓரம் ஈரப்பசையுடைய பூமியில் வளர்கிறது.

இதில் நாட்டு அத்தி, சீமை அத்தி இருவகைப்படும். பலன் ஒன்றே. இதன் இலை, பூ, காய், பழம், பட்டை, வேர் இவைகள் சிறந்த மருத்துவப் பலனுக்கு ஏற்றது.

நம்மில்ஒரு பழமொழி சொல்வார்கள. 'அத்தி பூத்தால்போல்' என்று கூறுவார்கள். அது ஏனென்றால் அத்திப்பூ ஒருஇரவில் பூக்கும் விடிவதற்குள் சிறு பிஞ்சுகளாக மாறிவிடும. அம்மலரிலுள்ள தேனைப்பருகி மயங்கிய நிலையில் இருக்கும் பூச்சி, கொசு இதனுள் சிக்கிக்கொள்ளும்போதே பிஞ்சு ஆகிவிடும். இது காய்கள் ஆனதும் தட்டிப்பார்த்தால் பூச்சிகள் இருக்கும். இதனைச் சுத்தப்படுத்தி இக்காய்களை, பிஞ்சுகளை சமயல்செய்து சாப்பிடுவது தொன்றுதொட்டுப் பழக்கமாகும்.

குடற்புண், வயிற்றுப்புண், வாய்ப்புண், பிரசவித்த தாய்மார்களுக்கு கிராணிககழிச்சல் உள்ளவர்களுக்கு அத்திக்காயை பூச்சியில்லாமல் சுத்தப்படுத்தி 100 கி காய்+100கி பிஞ்சு இரண்டையும் நன்றாக 500 மில்லி தண்ணீருடன் கலந்து அடுப்பிலேற்றி நன்றாகக் காய்ச்சி வடிகட்டி சிறிது உப்புக்கலந்து அல்லது கலக்காமலும் 100மில்லி அளவு காலை, மதியம், இரவு தினம் மூன்றுவேளை சாப்பிடவும். (ஆகாரத்திற்கு முன் காலை, இரவு படுக்கப்போகும் போது) 3 நாட்கள் வியாதிக்கேற்றவாறு 9நாட்கள் சாப்பிட்டால் மேற்கண்ட வியாதிகள் அதிசயிக்கத்தக்க நிலையில் பூரண குணம் ஏற்படும்.

**பெண்களுக்கு ஏற்படும் பெரும் பாடு, உதிரப்போக்கு, சீதபேதி, ஆசனக கருப்புவலி, எரிச்சல் உள்ளவர்களுக்கு**

அத்து மரப்பட்டையைக் கொணடு வந்து நன்றாக சுத்தம்செய்து சிறு சிறு துண்டாக நறுக்கி உலர்த்தி நன்றாக உல்த்தி தூள்செய்து ஒரு போத்தலில் அடைத்து வைத்துக் கொண்டு தினம் காலை, இரவு இரண்டுவேளைகள் 1டீஸ்பூன் தூளை வாயிலிட்டு ஆறின வெந்நீரில் விழுங்க வேண்டும். காலை ஆகாரத்திற்கு 1/2 மணி முன், இரவு ஆகாரத்திற்கு 1/2 மணி பின் 3நாட்கள், 5நாட்கள், 9நாட்கள் வியாதிக்கேற்ப சாப்பிடலாம்.

**விஷக்கடி, விஷம்சாப்பிட்ட தால் உண்டாகும் எரிச்சல், ஆண்குறி எரிச்சல், வெள்ளையில் எரிச்சல், உடல் உள் எங்கை எரிச்சல் இவைகள் குணமாக**



அத்திவேரைக் கொண்டு வந்து சுத்தம்செய்து சிறு சிறு துண்டுகளாக நறுக்கி நன்றாக உலர்த்தி தூள் செய்து ஒரு போத்தலில் அடைத்து வைத்துக்கொண்டு தினம காலை, மதியம், இரவு ஆகாரத்திற்கு முன் 1டீஸ்பூன் ஆறின வெந்நீருடன் சாப்பிட வேண்டும். 3நாட்கள், 9நாட்கள் சாப்பிட வேண்டும்.

அத்திப்பூ கிடைப்பது அரிது. அப்படிக்கிடைத்தால் அப்பூவைக் கஷாயம் செய்து சாப்பிட்டால் பீடி, சிகரெட் அதிகமாகப்பிடித்து உடல் நலம் பெரிதும் பாதிக்கப்பட்டவர்களின் பித்தம், அதிகவெப்பம்இந்நோய்உடன் அகலும். 3நாட்கள், 9நாட்கள் சாப்பிடலாம்.

**வெள்ளை பெரும்பாடு குணமடைய (ஸ்பெஷல்)**

அத்தி மரப்பட்டையை சுத்தம் செய்து பச்சையாக நசுக்கி (100கிராம்) சுத்தமான பசுமோரில் 4மணிநேரம் ஊறவைத்து (500மில்லி மோரில்) அதனுடன அத்திஇலை 10 கொண்டு வந்து சுத்தம்செய்து அரைத்து கலந்து நன்றாகக் கலக்கி 4மணி நேரம் ஊறவைத்து தினம் காலை, இரவு இரண்டுவேளை 100மில்லி வீதம் சாப்பிட்டால் சிறந்த பலன் ஏற்படும்.

**சலரோகம், சூலை, இரத்த மூத்திரம், பித்தம் நீங்க**

1டீஸ்பூன் அத்திப்பாலுடன் சுண்டைக்காய் அளவு வெண்ணை (பசு) கலந்து குழப்பி காலை, மாலை இருவேளை 3நாட்கள் அல்லது 9நாட்கள் சாப்பிட விரைவில் குணம் ஏற்படும்.

**அஸ்தமேகம்(எலும்பு வியாதி) உட்சூடு, மூர்ச்சை**

## மருத்துவ விளக்கம்

(மேல்மூச்சு, கீழ்மூச்சு) அதிக தாகம் இவைகள் குணம்காண அத்திக கள் (வேரில் இறங்கிய கள்) இக்கள்ளில் 300மில்லி கொண்டு வந்து அதில் சீனிச்சர்க்கரையுடன் பேயம்பழத்தை அளவாக நறுக்கிப் போட்டு கலந்து ஒரு போத்தலில் வைத்துககொண்டு தினம் அதிகாலை எழுந்து 1டீஸ் பூனால் எடுத்து வெறும் வயிற்றில் சாப்பிட விரைவில் குண மடையும். 3நாட்கள், 9நாட்கள்.

**மேகச்சொறி, குஷ்டரோகத் தடிப்பு, முலைப்புற்று (Cancer) நோய் குணமாக**

அத்திப்பாலை 1டீஸ்பூன் வீதம் தினம் 2வேளை சாப்பிடலாம்முலைப் புற்றுக்கு உள்ளுக்கும் மேலேயும் தடவி வரலாம் (கைபடாமல்) பசு வெண்ணையுடன் 1டீஸ்பூன் அத்திப்பாலை கலந்து குழைத்து உள்ளுக்கு சாப்பிட வேண்டும் 3நாட் கள், 9நாட்கள் சாப்பிடலாம்.

**ஆண், பெண் இருபாலாருக்கும் ஏற்படும் நீர்த்தாரை எரிச்சல் (வெள்ளையுடன்) மண்ணீரல், கல்லீரலை பாதுகாக்க, உதிரப்பெருக்கு நீங்க**

250 கிராம் அத்திப்பழத்தை சுத்தப்படுத்தி நீர்விட்டு அம்மியில் நன்றாக அரைத்து ஒருலீற்றர் சுத்தமான தண்ணீரில் கலக்கி வடிகட்டி அத்துடன் நாட்டுச் சுண்ணாம்பின் தெளிந்த நீர் 100மில்லி கலந்து 8மணி நேரம் ஊறவைக்க வேண்டும். இக்கலவை கூழ்போல் ஆகிவிடும், கெட்டியாகிவிடும். இதில் 1டீஸ்பூன் எடுத்து சர்க்கரைகலந்து காலை, மதியம் இரவு மூன்று வேளை தினமும் சாப்பிடலாம். 3நாட்கள், 9நாட்கள் சாப்பிடலாம்.

**இரத்தவிருத்தி, உடல் பருக்க, வெப்பத்தைத் தணிக்க**

சீமை அத்திப்பழம் 20 கொண்டு வந்து 4பாகமாக நறுக்கி 50மில்லி தேனில் கலந்து பக்குவப்படுத்தி ஒரு போத்தலில் வைத்துக் கொண்டு தினம் ஒருவேளை மட்டும் (காலை) சாப்பிட்டால் போதும். 3நாட்கள், 9நாட்கள் சாப்பிடவேண்டும்.

**சிறுநீரில் சர்க்கரை சத்து (நீரிழிவு)**



முறையாகக் குறைத்து பூரண சுகம் ஏற்படுவதற்கு பதப்படுத்தப்பட்ட அத்திப்பழத்தின் விதைகளை மட்டும் எடுத்து நன்றாக உலர்த்தி தூள்செய்து ஒருபோத்தலில் வைத்துக்கொண்டு தினம் காலை, மாலை 1/4 டீஸ்பூன்சிறிது தேன் கலந்து 1/2 மண்டலம், 1 மண்டலம் சாப்பிட வேண்டும். (24, 48 நாட்கள்) பூரண குணம் வெற்றி.

**வயதானவர்கள் இளமையை அடைவதற்கு**

இரவில் அத்திப்பழத்தை சுத்தம் செய்து (2 அல்லது 3பழம்)1டம்ளர் சுத்தமான தண்ணீரில் ஊறவைக்க வேண்டும். காலையில் பார்த்தால் மிருதுவாக மெத்தென்று இருக்கும். தினமும் காலையில் இந்தப்பழத்தை தின்று அந்நீரையே குடிக்கவேண்டும். 1/2 மண்டலம் சாப்பிட்டால் (24 நாட்கள்) உடற்சோர்வு நீங்கி வனபபுடன் வாலிபர்களைப்போல் மிடுக்காக இருப்பார்கள் என்பது ஐயமில்லை.

**கருப்பையில் இரணம் குணமாக**

அததிப்பட்டையைக் கொண்டு வந்து சுத்தம்செய்து உலர்த்தி தூள் செய்து வைத்துக்கொண்டு கார் அரிசியுடன் கலந்து புட்டுசெய்து சாப்பிட்டால் கருப்பை இரணம் குணமாகும்.

**ஜீரணசக்தி-மலச்சிக்கல்-இரத்தவிருத்திக்கு**

ஜீரணசக்திக்கு அத்திப்பழத்தை சுத்தம்செய்து துண்டு துண்டாக நறுக்கி இரவு பசும்பாலில் கலந்து காய்ச்சி சிறிது சர்க்கரை கலந்து இரவு படுக்கப்போகும்போது சாப்பிட்டு வரலாம். 3,5,9நாட்கள்.

**மலச்சிக்கல்**

அத்திப்பழம் 3சுத்தம்செய்து அப்படியே தினம் 2வேளை 5,9நாட்கள் சாப்பிடலாம்.

**இரத்த விருத்திக்கு**

நோய்வாய்ப்பட்டவர்கள் குண மாகாமல் இருந் தால தினம் 2அத் திப்பழமசாப பிட்டுவந்தால் இரத் தம் அபி விருத்தி ஏற்படும்.

**கால் ஆணி குணமடைய (அற்புத மருந்து)**

அத்திஇலை 50கி, துளசி இலை 50கி, வில்வஇலை 50கி, வேப் பிலை 50கி நன்றாக சுத்தம் செய்து ஒரு மட்பாண்டத்தில் போட்டு 2லீட்டர் சுத்தமான தண்ணீர்விட்டு அடுப்பலேற்றி நன்றாக காய்ச்ச வேணடும். (சாரம் தண்ணீரில் இறங்கும்படி) இறக்கி வடிகட்டி ஒரு போத்தலில் எடுத்து வைத்துக்கொண்டு இந்தக் கஷாயத்தை தினசரி காலை உணவுக்கு ஒரு மணி நேரம் முன் 50 மில்லியும், இரவு உணவுக்கு 1 மணி நேரம் முன்னால் 50 மில்லியும் 48 நாட்கள் சாப்பிட பூரண குணம் ஏறபடும்.

**நரம்புத் தளர்ச்சிக்கு**

அத்திப் பழத்தை சுத்தம் செய்து தினம 2 அத்திப்பழம் சாப் பிட்டு வந்தால் நரம்புத்தளர்ச்சி குணமாகும்.

அத்திப்பழத்தில் விற்றமின் A,B,C, கொழுப்பு, புரதம், காபோவைதரேற்று, இரும்பு, சுண்ணாம்பு மற்றும் எரிசத்துக்கள் அடங்கிய ஒரு சிறப்பான அத்திப்பழம் ஆகும்.

ஒரு கோழிமுட்டைக்கு 4 அத்திப்பழம் சமம்.

அத்திக்காய், பிஞ்சு இவைகளை நன்றாகச் சுத்தம் செய்து காரம், புளி சேர்க்காமல் பாசிப்பயறு கலநது கூட்டு சாம்பார் செய்து சாப்பிட்டு வந்தால் மலச்சிக்கல் நீங்கும். பிரசவமானவர்களுக்கு கிராணி பேதி நிற்கும், குடற்புண், வயிற்றுப்புண் நீங்கும் சீதபேதி, மூல வியாதி, சூலநோய், வாதநோய் பாசாணம் சாப்பிட்டவரின் உடல் அலர்ஜி. இரத்த விருத்தி, தாது விருத்தியும் உண்டாகும். □

டாக்டர்
K.பாலசுப்ரமணியம்

---

# கண்ணிவெடி அகற்றும் பணிகளால் காணிப் பிணக்குகள் ஏற்பட வாய்ப்பு

## காணிப் பதிவாளர் நாயகம் முன்னெச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

மக்கள் குடியிருப்பு பிரதேசங்களில் இயந்திரங்களின் உதவியுடன் இடம்பெறும் மிதிவெடி அகற்றும் நடவடிக்கைகளால் எதிர்காலத்தில் குடாநாட்டுமக்கள் மத்தியில் காணிப் பிணக்குகள் மற்றும் எல்லையில் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புண்டு என யாழ்.மாவட்டகாணிப பதிவாளர் நாயகம் சதாசிவ ஐயர் கவலை தெரிவித்துள்ளார்.

யாழ்.குடாநாட்டில் தற்போது மிதிவெடிஅகற்றும் பணியில் ஈடுபட்டுவரும் வெளிநாட்டு நிறுவனங்கள் இயந்திர உதவியுடனேயே இதனைச் செயற்படுத்தி வருகின்றன.

மண் கிளறப்படுதல், குவிக்கப்படுதல் போன்ற இச்செயற்பாடுகள் மூலம் தனிப்பட்டவர்களின் காணி எல்லைகள் மறைக்கப்படுகின்றன.

எதிர்காலத்தில் இக்காணிகளில் உரிமையாளர்கள்வந்துகுடியமர்ந்து தமது காணிகளை வரையறுத்தல் மற்றும் எலலை வேலியிடல் ஆகியவற்றை மேற்கொள்ளுமிடத்து பிணக்குகள் உருவாக இச் செயற்பாடு வாய்ப்பை ஏற்படுத்துகிறது.

மிதிவெடி அகற்றும் குழுக்கள், காணி எல்லைகளைச் சிதைக்காதவாறு பணிகளை மேற்கொள்ளும் பட்சத்தில் இவ்வாறான பிணக்குகள் ஏற்பட வழியில்லை என்றும் அவர்மேலும் கருத்துத் தெரிவித்தார். (உ-4)

# இலங்கை உள்வரவுக் கொள்கைகளில் ஓட்டை

(கொழும்பு)

விஸா வழங்குவதில்உள்ள சில சிக்கல்கள் காரணமாக சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு செலலும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை அதிகாித்துள்ளதாக உள்துறைஅமைச்சின் செயலாளர் எம்.என். யுனைட் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், தெற்காசியப் பிராந்திய நாடுகள் உட்பட71 நாடுகளில் இருந்து இலங்கை வருவோருக்கு வழங்கப்படும் ஒரு மாத விஸா அனுமதியே இந்நிலைமை ஏற்படக் காரணமாகும்.

உல்லாசப் பிரயாணத்துறையை மேம்படுத்தும் நோக்கில் இந்நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் சிலர் இவ்வாய்ப்பை துஷ்பிரயோகம் செய்கின்றனர்.

உள்விவகார அமைச்சும் பொலிஸ் திணைக்களமும் இணைந்து சட்டவிரோத குடியேற்றவாசிகளை கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன.

இதேவேளை, இலங்கையூடாக சட்டவிரோதமான முறையில் வெளிநாடுகளுக்கு செல்லும் பொருட்டு திட்டமிட்ட அடிப்படையில் வெளிநாட்டவர்கள் இலங்கைக்குள் பிரவேசித்திருப்பதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த இரண்டு மாதங்களில் மாத்திரம் சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்குச் செல்லும் பொருட்டு 600க்கும் மேற்பட்ட வெளிநாட்டவர்கள் நாட்டுக்குள் பிரவேசித்துள்ளனர் என்று தெரிவித்துள்ளார். (தி)

# பிரதமரின் செயலருக்கு அவசர தொலைநகல்

## யாழ்.மாவட்ட அரச அதிபர் அனுப்பிவைப்பு

(கொழும்பு)

தமிழகத்தின் அகதி முகாம்களில் தங்கியுள்ள ஈழத்தமிழர்கள் பெரும் உயிராபத்துக்களுக்கு மத்தியிலேயே கடல் மார்க்கமாக யாழ். குடாநாட்டுக்கு வருகின்றனர். இவர்கள் வரும்போது கடலில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை இல்லாதொழிக்கும் வகையில் அங்குள்ள அகதிகளை கப்பல் மூலம் யாழ். குடாநாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோனுக்கு அனுப்பி வைத்துள்ள தொலைநகலில் குறிப் பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டதாவது,

தமிழகத்தில் உள்ள ஈழ அகதிகள் தமது தாயகத்திற்குத் திரும்புவதற்குப் பெருவிருப்பம் கொண்டுள்ளார் களென ஏற்கனவே இங்கு வந்துள்ள மக்கள் தெரிவித்துள்ளனர்.

ஆயினும் நாடு திரும்புவதற்கு பெருந்தொகைப் பணம் செலவிடவேண்டியுள்ளது. இதனால் பல நடைமுறைப் பிரச்சினைகளையும் அவர்கள் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

எனவே, இவ் அகதிகளைப் பாதுகாப்பான முறையில் கப்பல்களில் இங்கு அழைத்துவர உடன் வசதிகளைச் செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.(உ-8)

## பரந்தன் சந்தை இயங்குகிறது

(தனங்கிளப்பு)

பரந்தன் நகருக்கான பொதுச் சந்தை [illegible] 10வருடங்களின் பின்பு கிளிநொச்சி பிரதேச சபையால் அண்மையில் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பரந்தனில் மீளக்குடியமர்வு மிகவும் துரிதமாக நடைபெறுவதையடுத்து, பொதுமக்களின் வசதி கருதி இச்சந்தை திறந்துவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(உ-37)

## இன்று ஒரு தகவல்

# கனவுகள்

1865 ஆம் வருடத்தில் ஓர் நாள் அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் தனது மனைவியிடம், ''அண்மையில் நான் ஒரு கனவு கண்டேன்'' என்றார். அவர் மனைவி ''என்ன கனவு?'' என்றார். அதற்கு இவர் கூறுகின்றார், ஒரு நாள் வெள்ளை மாளிகையில் அழுகைச் சத்தம் கேட்கின்றது. அதைக் கேட்டு நான் திடுக்கிட்டு விழித்து விட்டேன் மக்கள் எல்லோரும் கூட்டம் கூட்டமாக நின்று அழுகின்றார்கள். எனக்கு எதுவும் விளங்கவில்லை. மாடியிலிருந்து கிழிறங்கி வருகின்றேன். எல்லா அறையிலும் வெளிச்சம். அழுகைச் சத்தம் தொடர்ந்து கேட்கின்றது. அந்தச் சத்தம் எங்கிருந்து வருகின்றது என ஒவ்வொரு அறையாகத் தேடுகிறேன். கிழக்குப் பக்கத்தில் உள்ள அறை ஒன்றில் நுழைகின்றேன். அங்கு சவ ஊர்வலத்திற்குத் தயாராக ஒரு உடலை கிடத்தியிருக்கிறார்கள். அதன் முகம் மூடப்பட்டிருக்கின்றது. அதைச் சுற்றியிருப்பவர்கள் அழுது கொண்டிருக்கிறார்கள் என்றார். மனைவி, ''அது யாருடைய பிரேதம்?'' என்று கேட்கிறார். ''அவ்வுடல் ஜனாதிபதியுடையது. அவரை யாரோ கொலை செய்து விட்டார்கள்'' என்கிறார் ஆபிரகாம் லிங்கன்.

இது நடந்து சில நாட்களில் என்ன நடந்தது என்று உங்களுக்கே தெரியும். ''கனவு என்பது என்ன?'' ''கனவில் நடப்பவைக்கும், கண் முன்னால் நடப்பவைக்கும் தொடர்பு இருக்குமா?'' கனவுகள் விடைகாண முடியாத புதிர் என்று சிலர் கூறுவார்கள். கனவு மனச்சாட்சியின் குரல் என்று கூறினார் ''சோக்ரடீஸ்''. உடல் அசதி காரணமாக ஏற்படும் ஒரு வீண் காட்சி என்கிறார் ''வோல்டேர்''. உணர்வற்ற ஒரு நிலைக்கு அழைத்துச் செல்லும் ''ராஜபாட்டை'' என்கிறார் ''ஃப்ராய்ட்''. கனவுகள் மனிதர்களுக்கு மட்டுமல்ல மிருகங்களுக்கும் வரும்.

இராமயணத்தில் திரிசடை கண்ட கனவு, சிலப்பதிகாரத்தில் கோப்பெருந்தேவி கண்ட கனவு இவை யாவும் பின்னால் நிகழப்போகின்றவை பற்றி முதலிலேயே கூறிவிட்டன.

எகிப்து வரலாற்றில் ''4வது துட்மோஸ்'' என்று ஒருவர் வேட்டையாடிவிட்டு வந்த களைப்பில் ''ஸ்பிங்ஸ்'' தேவ்தை சிலைக்குப்பக்கத்தில் படுத்து நித்திரையாகிவிட்டார். அப்பொழுது அவருக்கு ஒரு கனவு. தான் பட்டத்துக்கு வருவது போல். அது போலவே அவர் பட்டத்துக்கும் வந்து விடுகின்றார். கனவுகள் சில சமயம் ஒழுங்காக கோர்வையாக வருகின்றது. சில சமயங்களில் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் வரும். விடிந்ததும் யோசித்துப் பார்த்தால் என்ன கனவு என்றே நினைவுக்கு வருவதில்லை.

பொதுவாக மூன்று நிலைகளில் கனவு வரலாமாம். ஒன்று கடுமையான அசதி, இல்லையென்றால் உடல் நிலைபாதிப்பு இவற்றால் வரலாம். மற்றையது, மனதிலுள்ள ஆசைகளை வெளிப்படுத்தும் வகையில் வரலாம். மூன்றாவது, ஆத்மாவிலிருந்து தெய்வீக சக்தியால் வெளிப்படுகின்றது எனவும் சிலர் கூறுவார்கள். இதில் முதலாவது நிலைக்கு விளக்கம் கூறமுடியும். ஏனைய இரு நிலைக்கும் விளக்கம் கூறுவது கடினம்.

இந்த உலகம் முடிவில்லாதது. சிக்கல் மிகுந்தது. இதைச் சமாளிக்க செயல்களை ஒழுங்கு முறைப்படுத்தி இயங்கிவரும் மனித இனத்திற்கு இரண்டு வழி உள்ளது. முதல் வழி நமது மூளையின் இடது பகுதியுடன் தொடர்புள்ளது. நாம் விழித்துக் கொண்டிருக்கும் போது, செய்யும் செயல்கள் யாவும் இதன் கட்டளைப்படி நடக்குமாம். இரண்டாவது வழி, நமது மூளையின் வலது பகுதியுடன் தொடர்புள்ளது. உண்மைச் செயலை விட உணர்வுக்கு மதிப்புக்கொடுக்கும் இந்தப்பகுதி தான் கனவுகாணும் மனநிலைக்கு வழிமுறை என்று தோன்றுகின்றது. பகலில் ஏற்படும் பலவித உணர்ச்சிகள் இங்கு பதிவாகி விடுமாம். இரவு நித்திரையில் கனவு என்னும்வடிகால் மூலம் அதற்குத் தீர்வு காணப்படும் என்று விளக்கம் கொடுக்கின்றார்கள்.

பொதுவாகக் கனவு காண்பது நல்லது என்று தான் பலர் கூறுவர். ''ஆழ்ந்த உறக்கம்போதுமான ஓய்வை நமது மூளைக்கு கொடுக்கின்றது. தீர்க்க முடியாத சிக்கல்களுக்கு கனவின் மூலம் தீர்வு ஏற்படும்.'' என்று அவர்கள் கூறுவார்கள். எத்தனையோபேர் தினமும் எத்தனையோ கனவு கண்டு கொண்டு தான் உள்ளனர். அவ்வளவும் உடனே நடந்து விடுவதில்லை. அபூர்வமாகச் சில கனவுகள் நடந்திருக்கும். அதைத்தான் முதலில் சொன்னேன். அதற்காக நீங்கள் கெட்ட கனவு கண்டால் அதை நினைத்து பயந்து விடாதீர்கள். இதற்காகத்தான் பெரியவர்கள் கெட்ட கனவுக்கு நல்ல பலன் உண்டென்றும், எதிர்மறையான பலன் உண்டென்றும் கூறுவார்கள்.

பத்து ரூபா தொலைந்ததாகக் கனவு கண்டால் பத்து ரூபா வருமானம் வரும். தோல்வியடைந்தது போல் கனவு கண்டால் வெற்றி அடைந்து விடுவாய். இப்படியெல்லாம் ஒரு மனேதைரியத்திற்காகக் கூறிவைப்பதும் உண்டு. இதிலும் ஒரு கஷ்டம்! ஒருவர் ஓடி வந்தார். '' சார் இன்று நான் உங்கள் வீட்டில் தங்கி விடுகின்றேன்.'' என்று பரிதாபமாகக் கெஞ்சினார். ''ஏன்?'' என்று கேட்டேன். ''நேற்று ஒரு கனவு கண்டேன்'' என்றார். ''என்ன கனவு?'' என்றேன். '' என் மனைவியை நான் அடிப்பது மாதிரி'' என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# முன்னுக்குப் பின் முரணான கோரிக்கைகளை முஸ்லிம் தலைவர்கள் முன் வைக்கின்றனர்

## வசீர் சேகுதாவுத் கண்டனம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தை தனித்தனியாக பிரிக்குமாறு கோரிக்கை விடுவது முஸ்லிம்களின் தனித்துவமான அரசியல் ஆக்கத்துக்கு ஆரோக்கியமானது அல்ல என வீடமைப்பு பிரதி அமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தவிசாளருமான வசீர் சேகுதாவுத் தெரிவித்துள்ளார்.

ஏறாவூர் அகமத் விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் இரவு நடை பெற்ற நிகழ்வொன்றில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய சேகுதாவுத் முஸ்லிம்மக்கள் தமது அரசியல் நலனையும், தனித்துவத்தையும் காத்துக் கொள்வதற்காக தனி அலகுக் கோரிக்கையை முன்வைப்பதில் நியாயமுள்ளது.

ஆனால், இதற்காக வடக்கு-கிழக்கு மாகாணத்தைப் பிரிக்குமாறு கோருவதில் எந்த வித நியாயமும் இல்லை.

வடக்கு-கிழக்கு மாகாணத்தை நிபந்தனையுடன் இணைக்குமாறு ஒரு தடவையும், நிபந்தனை இன்றிப் பிரிக்குமாறு இன்னொரு தடவையும் தனி அலகு தருமாறு மற்றும் ஒரு தடவையுமாக மூன்று விதமான கோரிக்கைகளை முன்வைப்பது முஸ்லிம்களின் உறுதியான அரசியல் நடவடிக்கைகளுக்கு இழுக்கு ஏற்படுத்துவதாக அமையும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வடக்கு- கிழக்கு மாகாணத்தை எவ்வித நிபந்தனைகளும் இன்றி உடனடியாகப் பிரிக்க வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அமைப்பாளர் அதாவுல்லா அண்மையில் தெரிவித்திருந்தது இங்கு குறிப்பிடத் தக்கது. (தி)

## தமிழகத்தில்இருந்து 22பேர் வருகை

(நெடுந்தீவு)

தமிழகத்திலிருந்து மேலுமொரு தொகுதி அகதிகள் நெடுந்தீவை வந்தடைந்தனர்.

கடந்த சனியன்று பி.ப.2 மணி அளவில் 10 குடும்பங்களைச் சேர்ந்த 22பேர் நெடுந்தீவு கோட்டைக் காட்டுப்பகுதியில் வந்திறங்கினர்.

இவர்களில் நெடுந்தீவு, அனலைதீவு, புங்குடுதீவு, அச்சுவேலி மற்றும் யாழ்ப்பாணம் ஆகியஇடங் களைச சேந்தவர்களாவர்.

(ந-48,117)

## புத்தளத்தில் மீட்கப்பட்ட குண்டுகள் செயலிழக்கச் செய்யப்பட்டன

### விசாரணை தொடர்கிறது

(புத்தளம்)

புத்தளம் மலீஹாபுரம் பகுதியில் பொலிஸாரால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மீட்கப்பட்ட விமானத்திலிருந்து தாக்கி அழிக்கும் 3 குண்டுகள் குறித்த விசாரணைகளை புத்தளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இரண்டரை அடி உயரம் கொண்ட இந்தக் குண்டுகள் எங்கிருந்து கொண்டு வரப்பட்டன, எதற்காக கொண்டு வரப்பட்டன என்பது மர்மமாக இருப்பதாக புத்தளம் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி கே.ஏ.ஆர்.பி. ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

சுமார் 6கிலோ எடையுள்ள ஒவ்வொரு குண்டுகளும், பாதுகாப்பாக புத்தளம் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்து செல்லப்பட்டு,

நேற்று திங்கட்கிழமை புத்தளம் பொலிஸ் நிலையத்தில் வைத்து விமானப் படை அதிகாரிகளினால் செயலிழக்கப்பட்டது.

(உ-15)

## இராசி பலன்

**22.07.2003**
**(ஆடி 06 செவ்வாய் )**
**நவமி - பி.இ 5.36 வரை**
**அச்சுவினி - மு.ப. 9.12வரை**
**இராகுகாலம்- 3.01-4.31**
**சுபநேரம்- 10.31-12.01**
**அமிர்தசித்தம், ஆடிச்செவ்வாய்**

**மேடம்**
தெய்வசிந்தை, எடுத்த கருமங்கள் கைகூடும், போசன சுகம், இலட்சுமிகரம்.

**இடபம்**
உணர்ச்சிவசப்படுதல், காரிய அலைச்சல், சுபசெலவு, சகோதரர் உதவி.

**மிதுனம்**
நல்லகாரியம், உறவினர் வருகை, பொருள் சேர்க்கை, பெருமையடைதல்.

**கடகம்**
அதிகாரம், நண்பர்கள் உதவி, உஷ்ண நிலை, எடுத்த கருமங்கள் கைகூடும்.

**சிங்கம்**
புதியசிந்தை, எதிர்பாராத நன்மை, கட்டுப்பாடு, முயற்சிகைகூடும்.

**கன்னி**
உறவினர் வெறுப்பு, வாகன பயம், திடீர் நன்மை, காரிய தாமதம்.

**துலாம்**
காரிய அனுகூலம், குடும்பநன்மை, பொருள் சேர்க்கை, விருந்துபசாரம்.

**விருச்சிகம்**
தடைப்பட்ட காரியங்கள் கைகூடும், பகை வரால் நன்மை, நண்பர்கள் சந்திப்பு.

**தனுசு**
சொதத்துக்களால் கவலை, ரோகபயம், காரிய தாமதம், திடீர் நன்மை.

**மகரம்**
மாதாசுகம், எதிர்பாராத உதவி, பிரயாண நன்மை, பெரியோர் சந்திப்பு.

**கும்பம்**
காரிய சித்தி, தொழில் முன்னேற்றம், தனலாபம், சிந்தனை மிகுதி.

**மீனம்**
வீண்வார்த்தை, காரியதடங்கல், உறவினர் சந்திப்பு தனவிரயம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)
- வளவன்

## தோட்டத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் முடிவுக்கு வந்தது

(கொழும்பு)

கடந்த ஒரு வாரகாலமாக வேலை நிறுத்தப்போராட்டத்தில் ஈடுபட்ட தோட்டத்தொழிலாளர்கள் நேற்று முதல் மீண்டும் வேலைக்குத் திரும்பியுள்ளனர்.

அமைச்சர் லக்ஷமன் கிரியல்லாவிடம் கடந்த யூன் மாதத்துக்கான சம்பளத்தை ஜனவசமத் தலைவர் வழங்குவதாக உறுதியளித்ததை அடுத்தே, தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பியுள்ளனர்.

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் என்பவற்றின் கீழ் இயங்கும் 32 தோட்டங்களைச் சேர்ந்த 30 ஆயிரம் தோட்டத் தொழிலாளர்கள் கடந்த 12ஆம் திகதி முதல் இவ்வேலை நிறுத்தப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

இவ்வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக ஜனவசம தோட்டத்துக்கு 50 இலட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (தி)

## தொலைபேசி பாவனையில் இலங்கைக்கு இரண்டாமிடம்

(கொழும்பு)

அதிக எண்ணிக்கையான கையடக்கத் தொலைபேசிகளை பயன்படுத்தும் தெற்காசிய நாடுகளின் பட்டியலில் இலங்கை இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது.

சர்வதேச தொலைத்தொடர்பு சங்கம் மேற்கொண்ட ஆய்வுகளில் இருந்து இவ்விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

தெற்காசிய நாடுகளில் அதிகளவான தொலைபேசிகளை பயன்படுத்தும், நாடுகளில் மாலைதீவு முதலாம் இடத்தையும், இந்தியா மூனறாம் இடத்தையும் பெறுகின்றன.

(தி)

## பயணிகளுக்கு காப்புறுதி வழங்கும் திட்டம் குறித்து ஆலோசனை

(கொழும்பு)

ரயில், பஸ்விபத்துகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை அடுத்து, பயணிகளுக்கு காப்புறுதி வழங்கும் திட்டம் பற்றி அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

இது பற்றி தாம் காப்புறுதி நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும் மிகக்குறைந்த தவணைப் பணத்தை கோரும் காப்புறுதி நிறுவனத்திற்கு பயணிகளுக்கு காப்புறுதி வழங்கும் பொறுப்பு ஒப்படைக்கப்படும் என்றும் போக்குவரத்து ராஜாங்க அமைச்சர் பியசோம உபாலி தெரிவித்துள்ளார்.

விபத்துகளில் பாதிக்கப்படும் பயணிகளுக்கு தாமதமின்றி நட்ட ஈடு வழங்கப்படவேண்டும். அத்துடன், தற்போது வழங்கப்படும் 3ஆயிரம் ரூபா காப்புறுதிப்பணம் எதற்குமே போதாது. பதிலாக ஒரு கணிசமான தொகை கிடைக்கக்கூடியதாகவும், அதேவேளை, தாமதமின்றி கிடைக்கக்கூடியதாகவும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

ஆரம்பத்தில் இக்காப்புறுதித் திட்டம் ரயில் மற்றும் அரச பஸ்களில் பயணிப்பவர்களுக்கே பயனளிக்கக்கூடியதாக இருக்கும். பின்னர் தனியார் பஸ்களில் பயணிப்பவர்களுக்கும் கிடைக்கக்கூடியதாக ஏற்பாடு செய்யப்படும். இதன் படி பயணிகள் மட்டுமன்றி, பணியாளர்களும் பயன் பெறுவர். இப்பொழுதும் தனியார் துறை பஸ்களில் பயணம் செய்வோருக்கு காப்புறுதி மூலமான நட்டஈட்டு உரித்து இருக்கின்றபோதிலும், பயணிகள் அது பற்றி அறியாமல் இருக்கின்றனர்.

அத்துடன், நட்டஈட்டைப் பெறும் நடைமுறைகளும் நீண்டவையாக இருப்பதால், இதனால்பயனடை பவர்கள் வெகு சிலரே.

இக்காப்புறுதி முறை அமுலுக்கு வரும்போது இது பற்றிய விபரங்கள் பஸ்களில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (து)

# செய்தித் துளிகள்

## நிர்வாகிகள் தெரிவு

(ஊர்காவற்றுறை)

யா/வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் அண்மையில் இடம்பெற்றபோது,

தலைவராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கமும் செயலாளராக ஜி.சற்குணபாலனும், உப செயலாளராக ந.ஜெயவீர சிகாமணியும், பொருளாளராக த.சண்முகதாசும், உப தலைவர்களாக எஸ். எக்ஸ். குலநாயகம், மு. தங்கவேல் ஆகியோரும் 9 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (உ-75)

## வழிகாட்டல் பயிற்சி

(ஊர்காவற்றுறை)

தீவகத்திலுள்ள அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான வழிகாட்டல் பயிற்சி நெறி ஒன்று அண்மையில் கரம்பொன் சண்முகநாதன் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

இரு நாட்கள் நடைபெற்ற இப் பயிற்சி நெறியில் தீவகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

பயிற்சியின் இறுதியில்,இந்து கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி திருநாவுக்கரசு பாடசாலைகளுக்கு தேவையான புத்தகங்கள், பதிவேடுகள், ஆசிரியர்களுக்கான சான்றிதழ்கள் ஆகியவற்றை வழங்கினார்.

இந்து கலாசார அமைச்சின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இவ் இறுதி நாள் நிகழ்வில்,ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம், கலாசார உத்தியோகத்தர் க.நித்தியானந்தன் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (உ-75)

## திடீர் மரண விசாரணை அதிகாரி இல்லை

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் திடீர் மரண விசாரணை அதிகாரி இல்லாமையால் அப்பகுதிப் பொதுமக்கள் பலத்த சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

திடீர் மரணங்கள் ஏற்பட்டால், பருத்தித்துறை சென்று மரணம் சம்பந்தமான விசாரணையை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றார்கள். (உ-35)

## பயிற்சிப் பட்டறை

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவி அரசாங்க பிரிவில் வெற்றிலைக் கேணி, போக்கறுப்பு கிராம அலுவலர் பிரிவுகளில் ஜீ.ரீ.சற். நிறுவனத்தால் கட்டிக்கொடுக்கப்படும் 175 வீடுகளின் பயனாளிகள் ஏழு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு அவற்றின் தலைவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். பொது ஸ்தாபன பிரதிநிதிகளும் இக்குழுவில் இடம் பெறுகின்றனர்.

இக்குழுக்களின் தலைவர்களுக்கும் பொதுஸ்தாபன பிரதிநிதிகளுக்குமான பயிற்சிப்பட்டறை எதிர் வரும் 24ஆம் திகதி வியாழக்கிழமை யாழ். ஜீ.ரீ.சற் நிறுவனக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது. (உ-35)

## கடல் அட்டை தாராளம்

(கொழும்புத்துறை)

குருநகர்,பாசையூர்,கொழும்புத்துறை மற்றும் நாவாந்துறை உட்பட பல்வேறு கடற்பிரதேசங்களில் கடல் அட்டைகள் அதிகமாகப் பிடிக்கப் படுகின்றன. தற்போதைய சூழ்நிலையில் மீனவர்கள் இரு நேரங்களில் தொழிலிற்குச் செல்வதை அவதானிக்க முடிகின்றது.

இதேசமயம், பெரிய அட்டை ஒன்றின் விலை ரூ.350 வரை விலைபோகின்றது. மாரிகாலம் வரைகடல் அட்டைகள் பெருமளவில் பிடிக்கமுடியும் என மீனவர்கள் தெரிவிததனர். (பி-51)

## பதவியேற்பு

(ஊர்காவற்றுறை)

தீவக லயன்ஸ் கழகத்தின் புதிய நிர்வாகிகள் பதவியேற்பு வைப வம் கடந்த சனிக்கிழமை புளியங்கூடல் நெசவு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் தலைவராக எம்.மகேந்திரன்,செயலாளராக கே. கணபதி, பொருளாளராக என்.நேசகுமார் ஆகியோர் பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர். (உ-75)

## வன்னியில் 340 அபிவிருத்தி திட்டங்கள்

(கிளிநொச்சி)

வன்னிப்பகுதியில் 340 அபிவிருத்திப் பணிகள் நான்கு கோடி 30 இலட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட இருப்பதாக வவுனியா அரச அதிபர் [illegible] தெரிவித்துள்ளார்.

35 கிராமங்களில் மேற்கொள்ளப்பட இருக்கும் இவ் உத்தேச பணிகளில் 140கிலோமீற்றர் நீள மான வீதிப்புனரமைப்பு, 35 குளங்கள் புனரமைப்பு, சுயதொழில் ஊக்கு விப்பு என்பன முக்கியமானவை எனத் தெரிவித்துள்ளார். (உ-3)

## புறாத்தீவு சரணாலயமாக பிரகடனம்

(திருகோணமலை)

திருகோணமலை நிலாவெளியில் உள்ள புறாத்தீவு தேசிய சரணாலயமாக பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.

சுற்றாடல் அமைச்சின் பல்வேறு அமைப்புகள் விடுத்த கோரிக்கையை அடுத்து, அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது. (தி)

## கொள்ளையன் கைது

(கொழும்பு)

வங்கிக் கொள்ளைகள் உட்பட பல குற்றச்செயல்களில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவரை மாத்தறைப் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

இவர் இராணுவத்திலிருந்து தப்பி ஓடியவர் என்பது ஆரம்ப விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இதேவேளை,ஆயுத முனையில் கப்பம் பெற்று வந்த கோஷ்டி ஒன்றையும் நுகேகொட பொலிஸார் கைது செய்துள்ளனர். (தி)

## ஸ்ரூடியோ எரிந்து நாசம்

(கொழும்பு)

வெள்ளவத்தை டபிள்யூ ஏ.டி. சில்வா மாவத்தையில் உள்ள படப்பிடிப்பு நிலையம் ஒன்றில் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் பாரிய தீ விபத்து ஏற்பட்டது.

இத் தீ விபத்தினால் மேற்படி வீதியில் உள்ள அக்னி போட்டோ நிலையம் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

தீ விபத்துக்கு மின் ஒழுக்கே காரணம் எனத் தெரியவந்துள்ளது.

இத்தீவிபத்துக்காரணமாக காலி, போக்குவரத்துக்கள் சில மணி நேரங்கள் தடைப்பட்டன. (தி)

## கதிர்காமத்திற்கு விசேட பஸ் சேவை

(கொழும்பு)

கதிர்காம ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு விசேட பஸ்சேவைகளை நடத்த நிஸ்ஸன் பஸ் கம்பனி முனவந்துள்ளது.

வவுனியா,யாழ்ப்பாணம் உட்பட அனைத்து பிரதேச மக்களினதும் நன்மை கருதி இந்தப் பஸ்சேவை இடம்பெறவுள்ளது. (உ-10)

## விண்ணப்ப படிவங்கள் விநியோகம்

(கோப்பாய்)

க.பொ.த சாதாரண தர,உயர் தர பரீட்சை ஆகியவற்றுக்கான அலுவலர் குழாமைத் தேர்ந்தெடுப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

ஆசிரியர்களுக்கான விண்ணப்ப படிவம் அதிபர் வலயக்கல்விப் பணிப்பாளர் ஆகியோரின் விதப்புரையுடனும்,அதிபர்களுக்கான விண்ணப் படிவங்கள கோட்டக் கல்விப் பணிப்பாளர், வலயக்கல்விப் பணிப்பாளா ஆகியோரின் விதப்புரையுடனும் அனுப்பி வைக்கப்பட்டவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (க-79)

## ஜே.வி.பி. இனி என்ன செய்யும்....?



# அடுத்த வரவு செலவுத் திட்டத்தில் சம்பள உயர்வுக்கு வாய்ப்புண்டு

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போது அரசாங்கத்தினால் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான நடவடிக்கைகள் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு அடித்தளமாக அமையும் என அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மதுருகிரியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் பேசிய அமைச்சர்,இவ் அடித்தளத்தை அமைப்பதற்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசு கடந்த ஒன்றரை வருடங்களாக அயராது உழைத்து வருகிறது.

இரு தரப்பினராலும் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான நடவடிக்கைகள் கடினமானதாக இருந்த போதிலும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அதனை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்கிறார்.

கடந்த ஒன்றரை வருட சமாதானச் சூழ்நிலை காரணமாக நலன்புரி நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடியளவு பொருளாதாரம் வளர்ந்துள்ளது.

இதனால், எதிர்வரும் நவம்பர் மாதம் நிதியமைச்சர் .கே.என். சொக்ஸியினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவுள்ள பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் சம்பள உயர்வும்,நலன்புரி நடவடிக்கைகளுக்கு நிதி ஒதுக்



கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

# இலங்கை குறித்த பிரிட்டனின் நிலைப்பாட்டை மீள் பரிசீலனை செய்யக்கோரிக்கை

(கொழும்பு)

உலகில் பாதுகாப்பான நாடுகள் சிலவற்றை தெரிவு செய்துள்ள பிரிட்டன்,அப்பட்டியலில் இலங்கையையும் சேர்த்திருப்பது குறித்து பிரிட்டனில் உள்ள தமிழ் அரசியல் தஞ்சம் கோருவோரைப் பாதுகாக்கும் குழு அதிருப்தி தெரிவித்துள்ளது.

அண்மையில் பிரிட்டனால் தெரிவு செய்யப்பட்ட பாதுகாப்பான நாடுகள் பட்டியலில் இலங்கையும் இடம்பெற்றுள்ளமை குறித்து மேற்குறிப்பிட்ட குழு தனது அதிருப்தியை வெளியிட்டிருக்கிறது.

இது தொடர்பாக பிரிட்டிஷ் உள்துறை அமைச்சருக்கு கடிதம் ஒன்றையும் இக்குழு அனுப்பியுள்ளது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது,


உலகில் பாதுகாப்பான நாடுகளாக பிறேஸில் ஈக்குவடோர், பொலிவியா, தென்ஆபிரிக்கா, உக்ரைன், பங்களாதேஷ் போன்ற நாடுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், அதே பட்டியலில் இலங்கையையும் சேர்த்திருப்பது எமக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஏனெனில்,கடந்த 20 வருடங்களாக இலங்கையில் இடம்பெற்ற இனப்பிரச்சினைகளால் ஆயிரக் கணக்கான அப்பாவித்தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர். பல கோடிக் கணக்கான சொத்துக்கள் அழிக்கப் பட்டுள்ளன. தமிழ் மக்கள் பலரை இலங்கை இராணுவத்தினர் சித்திரவதைக்குள்ளாக்கியுள்ளனர். வடக்கு-கிழக்கு பகுதி குரோஷியா போல காட்சியளிக்கின்றது. தமிழ் மக்களின் குடியிருப்பு பகுதியில் சிங்கள இராணுவத்தினர் தமது பாதுகாப்பு அரண்களை அமைத்து வருகின்றனர்.

இதனால் 5 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் மீளக்குடியமர முடியாத நிலையில் உள்ளனர். வீதிச்சோதனைகளாலும்,சுற்றி வளைப்புக்களாலும் தமிழ் மக்கள் நாளாந்தம் கைது செய்யப்பட்ட வண்ணம் உள்ளனர்.

இந்த நிலையில் இலங்கையை பாதுகாப்பான நாடுகளின் பட்டியலில் சேர்த்திருப்பதும் வேதனைக்குரியது.

எனவே இதனை உடனடியாக மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என தமிழ் அரசியல் தஞ்சம் கோருவேரைப் பாதுகாக்கும் குழு பிரிட்டிஷ் உள்துறை அமைச்சருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளது. (உ-10)



கட்டைவேலி நெல்லியடி கலாசாரப் பெருமன்றம் அண்மையில் ஐ.பி. சி. மற்றும் வலம்புரிச் செய்தியாளர் வே.தவச்செல்வனுக்கு துணிச்சலான பத்திரிகையாளர் விருது வழங்கிக் கௌரவித்தது. யாழ். மாவட்ட அதிபர் சங்கத்தலைவர் இந்த விருதை வழங்குவதைப் படத்தில் காணலாம். படம்: திருநெல்வேலி நிருபர்.

# பிரி. பிரதமர் பிளேயரின் ஆட்சிக்கு சோதனை ஏற்படுத்தியுள்ள விஞ்ஞானியின் மரணம்

(லண்டன்)

**பிரிட்டிஷ் உயிரியல் விஞ்ஞானி டாக்டர் டேவிட் ஹெலியின் மரணத்தைத் தொடர்ந்து பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயரின் அரசியல் நிலைப்பாடு ஆட்டங்கண்டுள்ள அதேவேளை டாக்டர் ஹெலி தனது மரணத்திற்கு சில மணி நேரத்துக்கு முன்னராக நண்பர்களுக்கு அனுப்பிய (ஈ-மெயில்) தொலை அஞ்சல் விபரங்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன.**

இந்தத் தொலை அஞ்சல்களில் எவ்வாறு 'சில கறுத்த நடிகர்கள் நாடகம் நடத்திக்கொண்டு' தம்மை பின்தொடர்கிறார்கள் என்பதை தெரிவித்திருந்தார் என்று கூறப்படுகின்றது.

அமெரிக்க ஊடகவியலாளர் ஒருவருக்கு டாக்டர் ஹெலி அனுப்பியுள்ள இந்தத் தொலை அஞ்சல் வரவிருக்கும் நீதி விசாரணைகளின் போது முக்கிய சாட்சியமாக முன் வைக்கப்படும் என்று கருதப்படுகின்றது.

பகிரங்கமான ஒரு விசாரணைக்குத் தாம் உட்படுத்தப்பட்டமைக்கு அமைச்சர்களும் அரசாங்க அதிகாரிகளுமே காரணமாக இருந்துள்ளார்கள் என டாக்டர் ஹெலி இந்த அஞ்சல்களில் உணர்த்தியிருப்பதாகவும் நம்பப்படுகின்றது.

சில தினங்களுக்கு முன் மர்மமான முறையில் மரணமான பிரிட்டிஷ் உயிரியல் விஞ்ஞானியான டாக்டர் டேவிட் ஹெலியின் மரணம் தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக ஹட்டன் பிரபுவின் தலைமையில் குழுவொன்றை பிரிட்டிஷ் அரசு நியமித்துள்ளது.

டாக்டர் ஹெலியின் மரணத்துக்கான சூழ்நிலைகளை ஆராய்ந்து அறிவிக்கவிருக்கும் இந்தக் குழுவுடன் முழுமையாக ஒத்துழைக்கப் போவதாக பிரிட்டிஷ் அரசாங்கமும் பி.பி.ஸி நிறுவனமும் அறிவித்துள்ளன.

இதற்கிடையில் பி.பி.ஸியில் வெளியான டாக்டர் ஹெலியின் கருத்துத் தொடர்பான அறிக்கையொன்றில் டாக்டர் ஹெலியின் கருத்தைத் தாம் திரித்து வெளியிட்டார் என்ற குற்றச்சாட்டை பி.பி.ஸி. ஊடகவியலாளர் அன்ரூ கெலியன் மறுத்துள்ளார்.

டாக்டர் ஹெலியின் மரணம் தொடர்பாக முதன்முதலில் கருத்து வெளியிட்டுள்ள அவரது குடும்பத்தினர் அவர் மரணமாவதற்கு முன்னர் 'சகிக்க முடியாத அழுத்தத்திற்குள்ளாக்கப்பட்டிருந்தார்' என்று கூறியுள்ளனர்.

இதற்கிடையில் முன்னாள் தொழில் அமைச்சர் ஒருவர் டாக்டர் ஹெலியின் மர்ம மரணம் தொடர்பாக பிரதம மந்திரி பிளேயர் பதவி துறக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தியுள்ளார்.

தூர கிழக்கு நாடுகளில் அரசு முறைப் பிரயாணம் மேற்கொண்டுள்ள பிரதமர் பிளேயரிடம் நிருபர்கள் டாக்டர் ஹெலியின் மரணம் பற்றிக் கேட்டபோது ''ஊடகத் துறையும் அரசியல் வாதிகளும் கட்டுப்பாட்டுடனும் மரியாதையுடனும் செயல்படவேண்டும். உண்மை நிலை வெளிப்படும் வரை நாமோ வேறு யாருமோ தீர்ப்புக்கள் வழங்க முற்படக்கூடாது'' என்றார்.

''பிரதமர் அவர்களே உங்கள் கைகள் இரத்தக்கறை புரண்டுள்ளனவா?'' என்று ஒரு நிருபர் கேட்ட போது பிளேயர் சற்றுத் திகைப்படைந்தவர் போல் காணப்பட்டார். ஆனால் பதில் அளிக்கவில்லை.

**சீனாவில் பிளேயர்.**

தூர கிழக்கு நாடுகளில் விஜயம் ஒன்றினை மேற்கொண்டுள்ள பிரிட்டிஷ் பிரதம மந்திரி பிளேயர் சீனா போய்ச் சேர்ந்துள்ளார்.

சீனாவின் புதிய தலைவர்களுக்கும் பிரிட்டிஷ் பிரதமருக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் நேற்று இடம்பெறவிருந்தது.

இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக அதிகரிப்பு, வடகொரிய அணுசக்தி விவகாரம் உட்பட பல விடயங்கள் ஆராயப்பட இருந்தன.

ஐந்து வருட கால இடைவெளிக்குப் பின்னர் முதல் தடவையாக சீனா சென்றுள்ள பிரிட்டிஷ் பிரதமர் சீன ஜனாதிபதி கூஜின்டோவையும் பிரதம மந்திரி லின்ஷியாவோவையும் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்த இருக்கின்றார்.

ஹொங்கொங்கில் இடம்பெற்று வரும் பாரிய ஆர்ப்பாட்டங்கள் தொடர்பாகவும் சீன பிரிட்டிஷ் தலைவர்கள் ஆராய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் ஹொங்கொங்குக்கு இன்று செல்வாரென அறிவிக்கப்பட்டுள்ளது. (பி-9)



**உத்தராஞ்சல் மாநிலத்தில் குட்டித்தீவு போல் ஆகிவிட்டது தேஹ்ரி நகர். நீர் மின் திட்டத்துக்காக பாகீரதி நதி மீது அணைகட்டியதால், நீர் தேங்கி இப்படிக் குட்டித் தீவு உருவாகிவிட்டது.**

# ஈராக்கிற்கு புதிய அதிபரை தெரிவுசெய்வதில் தாமதம்

(பக்தாத்)

அதிபரைத் தேர்வுசெய்யக் கூடிய ஈராக் நிர்வாகக் குழுக்கூட்டம் பலனின்றி தோல்வியில் முடிந்தது. எனினும் அதிபர் பதவிக்கு சுழற்சி முறையில் 3 பேரைத் தேர்வு செய்ய கூட்டத்தில் விருப்பம் தெரிவிக்கப்பட்டது.

அதிபரைத் தேர்வு செய்ய 25 பேர் கொண்ட குழுவை ஈராக்குக்கான அமெரிக்க நிர்வாகி பால் பிரமர் நியமித்திருந்தார். அதிபரைத் தேர்வு செய்ய கடந்த 6 நாட்களாக இக்குழு விவாதித்து வந்தது.

எனினும் ஒருவரிடமே அனைத்து அதிகாரப் பொறுப்பையும் கொடுப்பதை இக்கூட்டம் ஏற்கவில்லை. கவுன்சிலிலிருந்து 3 பேரை தேர்வு செய்து சுழற்சி முறையில் அவர்களிடம் அதிபர்களின் பொறுப்புக்களை பகிரந்தளிக்க உறுப்பினர்கள் யோசனை தெரிவித்துள்ளனர்.

கூட்டத்தில் முடிவு ஏதும் ஏற்படாததால் பால்பிரமர் உடனடியாக அமெரிக்காவுக்கு திரும்பி விட்டார். (பி)

# 28ஆம் திகதி செவ்வாய்க்கிரகம் பூமிக்கருகில் வருகின்றது

(மும்பை)

73 ஆயிரம் வருடங்களுக்கு பின் வானில் ஒரு அபூர்வம் நிகழவிருக்கின்றது. வருகின்ற 28ஆம் திகதி அதாவது அடுத்த திங்கட்கிழமை பூமிக்கு அருகே செவ்வாய் வருகின்றது. அன்று மாலை இதனைத் தெளிவாக அவதானிக்கலாம்.

சூரியனைச் சுற்றிவரும் செவ்வாய்க்கிரகம் பூமிக்கு மிக அருகே வருகின்றது. பூமியிலிருந்து 55.8 மில்லியன் கிலோமீற்றர் தூரத்தில் செவ்வாய் இருக்கின்றது.

இரண்டு வருடத்திற்கு ஒருமுறை பூமியும் செவ்வாயும் எதிரெதிரே வந்தாலும் இவ்வளவு அருகே வந்தது இதற்கு முன்னர் 73 ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் என்று டெல்லிநேரு பிளானடோரியம் இயக்குநர் டாக்டர் ரத்னஸ்ரீ தெரிவித்தார்.

இதற்கு பின்னர் 2257ல் தான் பூமிக்கு அருகே செவ்வாய்க் கிரகம் வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

பூமிக்கு அருகே செவ்வாய்க் கிரகம் வருவது அதிர்ச்சியான அனுபவம் என்று விஞ்ஞானிகள் மகிழ்ந்திருக்கின்றனர்.

அடுத்த திங்கட்கிழமை சூரியனுக்கு நேர் பின்னால் 180 டிகிரி கோணத்தில் செவ்வாய் வருவதால், பூமிக்கு அருகே அது வருகின்றது. ஒரு சுற்றின்போது பூமிக்கு மிக அருகே செவ்வாய்க்கிரகம் வருகின்றது. இந்த அபூர்வ நிகழ்வினை பூமியின் எந்தவொரு பகுதியிலிருந்தும் பார்க்கலாம். இதனை பூமத்திய ரேகைக்கு அருகே வசிப்பவர்கள் மிக எளிதாக பார்க்க முடியும் என்று ரத்னஸ்ரீ மேலும் தெரிவித்தார்.

செவ்வாய் கிரகத்தை பற்றிய ஆராய்ச்சியை விண்வெளி விஞ்ஞானிகள் முடுக்கி விட்டிருக்கும் போது இந்த நிகழ்வு அவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம். பூமியைப் போன்று செவ்வாய் கிரகத்தில் மனிதர்கள் வசிக்கும் சாத்தியக்கூறுகள் அதிகம் இருப்பதாக ஆராய்ச்சி முடிவுகள் கூறுவதால், செவ்வாய்க் கிரகத்தின் வரவை பார்க்க டெலஸ்கோப்புடன் ஆவலுடன் காத்திருக்கின்றனர் விண்வெளி ஆராய்ச்சியாளர்கள். (பி)

## தேநீர்க் கடைக்குள் பஸ் பாய்ந்ததில் 3பேர் மரணம்

(சென்னை)

சென்னை கோயம்பேடு அருகே 100 அடி வீதியில் தறிகெட்டு ஓடிய பஸ், தேநீர்க்கடை ஒன்றில் இடித்து நின்றதில் அங்கிருந்த 3 பேர் நசுங்கி மரணமடைந்தனர். 10 பேர் படுகாயமடைந்தனர்.

செங்குன்றத்திலிருந்து கிண்டிக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை சென்றுகொண்டிருந்த பஸ்ஸை லொறி ஒன்று முந்திச் செல்ல முயன்றதாகவும், பஸ் ஓட்டுநர் பஸ்ஸை இடது பக்கம் திருப்ப முயன்றும் அது தறிகெட்டு ஓடியதாகவும் கூறப்படுகின்றது.

ஓட்டுநர் எவ்வளவோ முயன்றும் பஸ்ஸை கட்டுப்படுத்த முடியவில்லை. எனவே திடீரென்று கீழே குதித்து தப்பிவிட்டாராம்.

பஸ் பிளாட்பாரத்தில் ஏறி சாலையோரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களை இடித்து நொறுக்கி விட்டு அங்கிருந்த மின்வாரிய பெட்டியையும் சாய்த்துவிட்டு, தேநீர் கடையின் முன் நின்றவர்கள் மீது ஏறி இடித்து கடையைத் தரைமட்டமாக்கியபின் நின்றுவிட்டது. (பி)



**தென்னாபிரிக்க முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலா, தனது 85-வது பிறந்தநாள் விழாவில் காகித மலர்கள் மழையில் மனைவி கிரோசுடன் காணப்படுகின்றார்.**

# கென்யா விமான விபத்தில் உல்லாச பயணிகளுடன் 14 பேர்பலி

(நைரோபி)

கென்யாவில் இடம்பெற்ற விமான விபத்தில் 12 உல்லாசப் பயணிகள் உட்பட 14 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஆபிரிக்க நாடுகளில் இரண்டாவது அதி உயரமான மலை என அழைக்கப்படும் மௌன்ட்கென்யா என்னும் மலைத் தொடரில் இந்த விமானம் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

கென்ய மலைத் தொடர்களை உல்லாசமாக பயணிகள் விமானத்தில் இருந்தவாறு சுற்றிப் பார்த்துக்கொண்டிருந்த போது, இந்தக் கோர விபத்து இடம்பெற்றுள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்தோரின் சடலங்களை மீட்பதற்காக விசேட ஹெலிகொப்டர்கள் அந்தப் பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளதாக கென்ய அதிகாரிகள் கூறுகின்றனர். (பி-9)

# ஒட்டிப்பிறந்த குழந்தைகளை பெற்றோர் ஏற்கமறுப்பு

(புதுடில்லி)

இந்திய தலைநகரில் கடந்த மாதம் ஒரு தம்பதிக்கு அழகான இரட்டைக் குழந்தைகள் ஒட்டிப் பிறந்தன. ஆனால் இந்த இரட்டைக் குழந்தைகளுக்கு நெஞ்சுக்கு கீழே உள்ள பாகங்கள் அனைத்தும் ஒட்டியிருந்தது. இந்த குழந்தைகளுக்கு தற்போது புதுடில்லியிலுள்ள லேடிஹார்டிங் மருத்துவ மனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

இந்தக் குழந்தைகளை பிரிக்க முடியாது என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அப்படி ஒருவேளை அறுவைச் சிகிச்சை செய்து இந்த குழந்தைகளை பிரிக்க முயன்றால் இதில் ஒரு குழந்தையை தியாகம் செய்ய வேண்டிவரும் எனவும் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஒட்டிப்பிறந்த இரட்டைக் குழந்தைகளை பெற்றெடுத்த பெற்றோர்களே ஏற்க மறுத்துள்ளதாக தெரிகிறது. டாக்டர்கள் எவ்வளவோ கூறியும் தந்தை, தாய் இருவருமே இந்த குழந்தைகளை வீட்டுக்குக் கொண்டு செல்ல மறுத்துவிட்டதாகக் கூறப்படுகின்றது.

இதனிடையே இந்த இரட்டைக் குழந்தைகளை பேணி வளர்க்கிறோம் என சில தன்னார்வ அமைப்புக்கள் முன்வந்ததாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. ஆனால் இதற்கு நடைமுறைச் சிக்கல்கள் நிறைய இருக்கின்றது என டாக்டர்கள் தெரிவித்தனர் என மருத்துவ மனை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இந்த ஒட்டிப்பிறந்த குழந்தைகளுக்கு தலை, கால்கள் சாதாரணமாக இருந்த போதிலும் இருவருக்குமே சேர்த்து இரண்டு கால்கள் மட்டுமே இருந்தன. (பி)

# இந்திய பாராளுமன்றின் மழைக்கால கூட்டத்தொடர் நேற்று ஆரம்பம்

## மகளிர் இடஒதுக்கீடு மசோதா நிறைவேற்றப்படலாம்

(புதுடில்லி)

மிகவும் பரபரப்பான சூழ்நிலையில் பாராளுமன்ற மழைகால கூட்டத்தொடர் நேற்று ஆரம்பமானது. இந்தக் கூட்டத் தொடரிலாவது பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீட்டிற்கு வகை செய்யும் மகளிர் மசோதா நிறைவேறுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்திய பாராளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் கடந்த மே மாதம் முடிந்தது. இதையடுத்து மழைக்கால கூட்டத்தொடர் நேற்று ஆரம்பமானது. இக்கூட்டத்தொடர் சுமார் 1 மாதம் நீடிக்கும். இக்கூட்டத் தொடரில் அயோத்தி பிரச்சினை, நாட்டில் பல்வேறு பகுதிகளில் அடிக்கடி நடக்கும் ரயில் விபத்துக்கள், விமான விபத்துக்கள் உட்பட பல முக்கிய பிரச்சினைகளை தேசிய ஜனநாயக கூட்டணி அரசுக்கு எதிராக எழுப்பி அமளி துமளியை ஏற்படுத்த காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் முடிவு செய்துள்ளன.

சபையில் புயல் வீசும் வெளி நடப்பு இருக்கும் என்றெல்லாம் எதிர்பார்க்கப்படுகின்றது. மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர், ராஜஸ்தான், டெல்லி உட்பட 5 முக்கிய மாநிலங்களில் சட்டமன்ற தேர்தல்கள் நடைபெற இருக்கின்றன. இங்கு காங்கிரஸ் அரசுகளை வீழ்த்த பாரதிய ஜனதா முடிவு செய்துள்ளது.

அடுத்தாண்டு நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலுக்கு முன்பாக இந்த தேர்தல்கள் வருவதால் பா.ஜ.வுக்கு இது ஒரு சோதனைக் களமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. சட்டமன்ற தேர்தலுக்கு முன்பாக நடைபெறவிருக்கும் கடைசி பாராளுமன்றக் கூட்டத் தொடர் இது என்பதால் இந்தக் கூட்டத் தொடர் முக்கியத்துவம் பெறுகின்றது.

பாபர் மசூதி இடிக்கப்பட்ட வழக்கில் துணைப்பிரதமர் அத்வானி, மத்திய மந்திரி ஜோஷி மற்றும் பா.ஜ.க, விஸ்வ இந்துப் பரிஷத் தலைவர்கள் ஆகியோர் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே இவர்கள் ராஜினாமா செய்யவேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தக்கூடும்.

ரயில் விபத்துக்கள் நாட்டில் அதிகரித்து வருவதால் ரயில்வே அமைச்சர் நிதிஷ்குமாரை துளைத்து எடுக்க காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகள் முடிவு செய்துள்ளன. பெண்கள் இட ஒதுக்கீடு மசோதா, அயோத்திப் பிரச்சினை, பொதுத்துறை நிறுவனங்களை தனியாருக்கு தாரைவார்த்தல் போன்ற பிரச்சினைகளை எதிர்க்கட்சிகள் எழுப்பக் கூடும். இக்கூட்டத் தொடரில் பிரதமரே விசாரிக்க வகை செய்யும் லோக்பால் மசோதா, மகளிர் இட ஒதுக்கீடு மசோதா உட்பட 35 மசோதாக்கள் எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றன.

முன்னதாக இந்தக்கூட்டத் தொடரில் மேற்கொள்ள வேண்டிய யுத்திகள் குறித்து முடிவு செய்வதற்காக திருமதி சோனியா காந்தியின் வீட்டில் எதிர்க்கட்சிகளின் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. இக்கூட்டத்தில் இடதுசாரிகள், சமாஜ்வாதிக் கட்சி, ராஷ்ட்ரீய ஜனதாதளம், சரத்பவார் கட்சி ஆகிய கட்சிகள் கலந்துகொண்டன.

மேலும் இடதுசாரிகள் தனியாகவும் ஆலோசனைக் கூட்டம் நடத்தின. தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசுக்கு எப்படியெல்லாம் தொந்தரவு கொடுப்பது என்று இந்தக் கூட்டத்தில் இக்கட்சிகள் ஆலோசனை நடத்தின. மொத்தத்தில் இந்த மழைக்கால கூட்டத்தொடரில் புயல் அதிகமாகவே வீசும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (பி)

*நட்டார் போல் நல்லவை சொல்லினும் ஒட்டார் சொல் ஒல்லை உணரப்படும்.*
*– குறள்*

# வலம்புரி

## சொல்லுதல் யார்க்கும் எளிய...

விடுதலைப்புலிகள் கோரி நிற்கும் இடைக்கால நிர்வாக சபையை அமைச்சரவையின் அங்கீகாரத்தின் மூலமோ அன்றி, விசேட சுற்று நிருப அறிவித்தல் மூலமோ வழங்க முடியும். இவ்வாறு கூறியிருப்பவர் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கா.

சுவ சாதாரணமாக அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் வழங்கக் கூடிய இடைக்கால சபையை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா புலிகளிடம் வழங்கியிருந்தால் யப்பானின் தலைநகர் டோக்கியோவில் நடந்த இலங்கைக்கான உதவி வழங்கும் மாநாட்டில் விடுதலைப்புலிகள் கலந்து கொண்டிருப்பர். அதேநேரம் சமாதான முயற்சிகளும் எதிர்பார்த்த இலக்கை - வெற்றியை அடைந்திருக்கும்.

ஆனால், இடைக்கால நிர்வாக சபையை புலிகள் கோரிய போது அதனை வழங்குவதற்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தயாராக வில்லை. மாற்றுத் திட்டமொன்றைத் தயாரித்து அதனையேவிடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைத்தார். அந்த மாற்றுத் திட்டத்தை புலிகள் முற்றாக நிராகரித்த போது, தான் தயாரித்த மாற்றுத்திட்டத்திலேயே திருத்தங்கள் செய்து மீண்டும் விடுதலைப்புலிகளுக்கு அனுப்பி வைத்தார். அதனையும் நிராகரித்த விடுதலைப்புலிகள் இடைக்கால நிர்வாகசபை தவிர்ந்த வேறெந்த மாற்றுத் திட்டங்களையும் ஏற்கத் தயார் இல்லைஎன திட்ட வட்டமாகத் தெரிவித்தனர்.

விடுதலைப்புலிகளின் இந்த அறிவித்தல் அவர்களை ஏமாற்ற முடியாது என்ற உண்மையை மீண்டும் ஒரு முறை பிரதமர் ரணிலுக்கு உறுதி செய்தது.

இதனால் விழிப்படைந்த அவர், இடைக்கால நிர்வாக சபை அமைப்பது தொடாபாக பிரிட்டனின் சட்ட நிபுணர்களிடம் ஆலோசனை பெற வேண்டும் எனக் கூறினார். இப்படியே காலத்தைக் கடத்திய பிரதமர் இப்போது இடைக்கால சபையை விடுதலைப்புலிகளுக்கு வழங்குவதற்கு அமைச்சர் அவைத் தீர்மானமோ அல்லது ஓர் விசேட சுற்று நிருபமோ போதுமானது எனக் கூறியிருக்கிறார்.

பிரதமரின் இக்கூற்று அவரிடம் ஏற்பட்ட கனிவு என்று கூடக் கருதிக் கொள்ளலாம். ஆனால் சிங்களத் தலைவர்கள் எவரினதும் வாய்ப்பேச்சுக்களைத் தமிழ் மக்கள் நம்பத் தயாராக இல்லை.

உண்மையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் எனபிரதமர் ரணில் விக்கிரம சிங்கா விரும்பினால், அவர் வார்த்தைகளால் சொல்வதை விட செயலில் காட்டுவதே மேலானதாகும். அவ்வகையில் அரசினால் விடுதலைப்புலிகளிடம் கையளிக்கப்பட்ட இடைக்கால சபைத் திட்ட வரைபை புலிகள் ஏற்பார்களாயின், அதனை தான் கூறிய வழியில் வழங்க பிரதமர் தயாராக வேண்டும்.

# நாடு பிளவுறுவதைத் தடுக்க; தமிழர்களுக்கு உள்ள உரிமைகளை உறுதி செய்ய வேண்டும்

## நீதிக்கும் சமாதானத்திற்குமான ஆணைக்குழுப் பிரமுகர் தென்பகுதி பத்திரிகையாளர் மத்தியில் கருத்துரை

(தென்மராட்சி)

இலங்கை ஒரே நாடாக இருக்க வேண்டுமென தென்பகுதி பெரும்பான்மை இன மக்கள் விரும்புவார்களேயாயின் இந்த நாட்டில் தமிழர்கள் தம் உரிமைகளைப் பெற்று தமிழர்களாக வாழ வழிவகை செய்யப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் நாடு பிளவுபடுவதை எச்சதியாலும் தடுக்க முடியாது. எனவே, தென்னிலங்கைப் பத்திரிகையாளர்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற தமிழ்ப்பேசும் மக்களின் உண்மையான நிலைப்பாட்டினை நன்கு எடுத்துக் கூறவேண்டும்.

யாழ்.கத்தோலிக்க மறைமாவட்டத்தின் நீதிக்கும் சமாதானத்துக்குமான ஆணைக் குழுவைச்சேர்ந்த வண.பிதா எஸ்ரவீந்திரன் அடிகள் நேற்று முன்தினம் வருகை தந்திருந்த தென்பகுதி பத்திரிகையாளர் மத்தியில் கருத்துரை வழங்கும்போது இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நடைபெற்ற இப்பத்திரிகையாளர் சந்திப்பின்போது - கொழும்பிலுள்ள மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஊடகத்துறைப் பணிப்பாளர் சுனந்ததேசப்பிரிய தலைமையிலான 20பேர் கொண்ட பத்திரிகையாளர்கள் பங்குபற்றியிருந்தனர்.

இணையத்தின் உபதலைவரான வீ.ஸ்ரீசக்திவேல் தலைமையில் நடைபெற்ற இச்சந்திப்பின்போது வண.பிதா ரவீந்திரன் அடிகள் தொடர்ந்து குறிப்பிடும்போது;

### விரைந்து தீர்வு

இலங்கையில் நிரந்தர சமாதானம் நிலவவேண்டுமாயின் இனப்பிரச்சினைக்கு விரைவான தீர்வு காணப்படவேண்டும். வடக்கு - கிழக்கில் இன்னமும் இயல்பு வாழ்க்கை ஏற்படவில்லை. அதியுயர்பாதுகாப்பு வலயம் என்ற பேரில், பொதுமக்கள் ஆண்டாண்டுகாலமாக வாழ்ந்த இடங்கள் இப்போதும் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றன.

ஆனால், வீடுகளின் சொந்தக்காரர்களோ இடம் பெயர்ந்தோர் முகாம்களில் பல்வேறுபட்ட துன்பங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் மத்தியில் வாழ்கின்றனர். புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டுள்ள 18மாத காலப்பகுதியில் குறிப்பிட்டுச் சொல்லும்படியாக எதுவுமே நன்மையாக இடம் பெறவில்லை. வட பகுதியில் வாழ்கின்ற மீனவர்கள், விவசாயிகள போதியவருமானமற்ற நிலையில் பரிதாபகரமான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் முன்னெடுக்கப்பட்ட பொங்குதமிழ் நிகழ்வு மூலம் மக்களின் உணர்வலைகள் வெளிப்படுத்தப்பட்டன. இதன்மூலம் மக்களது உண்மையான தேவைகள் அபிலாசைகள்பற்றி எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இது மக்கள் நிகழ்வேயாகும் எனக்குறிப்பிட்டார்.

யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புகளின் ஒன்றியப் பிரதிநிதியான சீ.வீ.கே.சிவஞானம் அங்கு குறிப்பிடும் போது;

### தலைவரின் உறுதி

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட 18மாத காலப்பகுதியில் துப்பாக்கிகள் ஓசை எழும்பவில்லை. மௌனித்து விட்டன. தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் தனது படைகளைக் கட்டுப்பாட்டில் வைத்துள்ளார். இதன் மூலம் அவர் சமாதானத்தில் எந்தளவு பற்றுறுதியடன் இருக்கின்றார் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

வடக்கு பிரதேசத்தில் அதியுயா பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் பாதுகாப்புப்படையினர் மேற்கொள்கின்ற அநீதிகள் கொஞ்சம் நஞ்சமல்ல. தமிழ் மக்களின் ஏகப்பிரதி நிதிகள் தமிழீழ விடுதலைப்புலிகள் மட்டுமே. பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை வைத்துக் கொண்டு இது தீர்மானிக்கப்படுகின்ற விடயமல்ல.

தமிழர் சமுதாயம் என்றுமே பிரிவினையையோ அல்லது தனிநாட்டையோ கோரவில்லை. நாம் இடைக கால நிர்வாகத்தைக் கோருகின்ற போது தென்பகுதியிலுள்ள பலம் பொருந்திய சக்திகள் பிரபாகரன் தனிநாடு கோருகின்றார் என அதனைக கற்பிதம் செய்கின்றன. தென்பகுதியில் இருக்கும் பத்திரிகையாளர் தமிழ் மக்களின் உண்மையான பிரச்சினைகளையும், தேவைகளையும் முன்வைப்பதில்லை. இந்தநிலை மாற வேண்டும் என்றார்

### சொந்தக் காலில் நிற்கவே விரும்...

யாழ்ப்பாணம் ... அபிவிருத்தி மன்றத்தின் தலைவி ...மதி எஸ்.ஜெகதீஸ்வரன் அங்கு கருத்துரையாற்றும் போது;

தமிழ் மக்களாகிய நாம் எமது சொந்தக்காலில் நிற்கவே விரும்புகின்றோம். என்ற செய்தியை தென்பகுதியில் இருக்கக்கூடிய மக்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள். நாம் நமது வீட்டுக்குப் போக வேண்டும். இராணுவம் தங்கள் வீட்டுக்குப் போக வேண்டும். சமாதானம் நிலைக்குமா என்ற ஐயமே இப்போது ஏற்பட்டுள்ளது. இங்கு ஆயிரக்கணக்கானவர்கள் தொழில் இன்மையினால் பாதிப்படைந்துள்ளனர்.

நாம் விடுதலை அடைவோம். எமது மண்ணில் நாம் சுதந்திரமாக வாழ்வோம் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது என்றார்.

இச்சந்திப்பின்போது சமாசத் தலைவர் எஸ்.தவரட்ணம், பொ.சிவபாலன், சுஹரீ முரளிதரன் குருககள் ஆகியோரும் கருத்துரை வழங்கினர். (உ-77)

## தான்தோன்றித்தனமாக நடக்கும்

# அரசசார்பற்ற நிறுவனங்கள் குறித்து அரசாங்க அதிபர் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

அரசாங்க அதிபர் மற்றும் பிரதேச செயலாளர்களின் அனுமதி இன்றி அரச சார்பற்ற நிறுவனங்கள் தன்னிச்சையாக மக்களுக்கு சேவையாற்ற அனுமதிக்க வேண்டாம் என அரசாங்க அதிபர் பத்மநாதன் அறிவுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் சேவையாற்றும் பல அரச சார்பற்ற நிறுவனங்கள் அரச அதிபரின் அனுமதி இன்றி தன்னிச்சையாக இயங்கி வருவதாகவும், கிராம அலுவலர்களிடம் கையொப்பத்தை பெற்று விட்டு அரச அதிபரின் அனுசரணையுடன் திட்டங்கள மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வெளிகாட்டிக் கொள்வதால் யாழ்.செயலகம் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி உள்ளதாகவும் அரச அதிபர் குற்றம் சாட்டியுள்ளார்.

ஒழுங்கமைப்பு அற்ற முறையில் அரசசார்பற்ற நிறுவனங்கள் செயற்படுவதனால் ஒருவரே ஒன்றுக்கு மேற்பட்ட உதவிகளைப் பெற்றுக் கொள கின்ற நிலைமை ஏற்படுகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, கிராம அலுவலர்களுக்கு இவ்விடயம் தொடர்பாக அறிவுறுத்தல்கள் வழங்கும்படி பிரதேச செயலாளர்களுக்கு அரச அதிபர் பணிப்புரை விடுத்துள்ளார். (உ-3)

# கடற்புலிகளின் தளபதி

# க.கா. குழு மீண்டும் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசையைச் சந்தித்து மீண்டும் ஒரு பேச்சு வார்த்தை நடத்துவதற்காக இலங்கை போர் நிறுத்த கண்காணிப்பு குழுவின் கடற்கண்காணிப்புப் பிரிவினர் இவ்வாரம் வன்னி செல்லவுள்ளனர். இவ் இருதரப்பினருக்கும் இடையிலான பேச்சுவார்த்தை முல்லைத் தீவிலுள்ள கடற்புலிகளின் தளமொன்றில் இடம் பெறவுள்ளதாக வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த புதன்கிழமை வன்னி சென்றிருந்த கண்காணிப்புக் குழுத்தலைவர் ரிக்வே ரெவ்லவ்சன் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசையைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியது தெரிந்ததே.

அதன் போது அரசுக்கும் - புலிகளுக்குமிடையேயான போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தானதன் பின்னரும், கடற்புலிகளின் கப்பல் போக்குவரத்துக்கள் அப்போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறியதோர் செயலாகும் என கண்காணிப்பு குழுத்தலைவர் சுட்டிக்காட்டினார்.

இதன் காரணமாக, இவ்வாறான அசம்பாவிதங்களைத் தவிர்க்கும் முகமாக வட-கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள நிலப்பரப்புகள், கடற்பரப்புகள் ஆகியவற்றில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அங்கத்தவர்களின எண்ணிக்கையை அதிகரிக்கப் போவதாக தளபதி சூசையிடம் ரெவ்லவ்சன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கடற்கண்காணிப்பு நடவடிக்கைகளில் நிபுணத்துவம் வாய்ந்த பலர் கடற்கண்காணிப்புக் குழுவில் புதிதாக இணைக்கப்படுவார்கள் ஆனால், கடற்புலிகளின் கடற்போக்கு வரத்து நடவடிக்கைகளில் பல புதிய திட்டங்கள நடை முறைப்படுத்தப்படலாம் என நம்பப்படுகிறது.

அதேவேளை, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் கடற் கண்காணிப்புக் குழுவினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இவ்வாரம் வன்னியில் சந்திப்பு நடைபெறவுள்ளதை உறுதி செய்த பின்னரே கண்காணிப்புக் குழுத் தலைவர் ரிக்வே ரெவ்லவ்சன் கொழும்பு திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-18)

## தினசரி தியானம்

### தெய்வச்சிலை

மன்னரது உருவமோ, குடியரசுக்கான அடையாளச் சின்னமோ, இல்லாவிட்டால் நூறு ரூபாய் நோட்டுவெறும் காகிதம்தான். தேசியக்கொடி சாதாரண ஒரு துண்டுத் துணிதான். ஆனால் வீரனுக்கு அதுமிக மதிப்புடைய ஒன்றாகும், இக்கொடியை காப்பாற்ற தன் உயிரையும் கொடுக்கத் தயாராகின்றான். புனிதமும்-அந்தம் இல்லாமையும் கொண்ட இறைவனைக் குறிக்கும் என்பதால் கல்லாலோ லோகத்தாலோ செய்யப்பட்டு கோவிலில் வைக்கப்பட்டுள்ள தெய்வச்சிலை பக்தனுக்கு விலை மதிக்க முடியாததாகிறது. அச்சிலை பக்தனிடம் பத்தியினாலேயே பேசும் சிலை பக்தனது உள்ளததில தெய்வீப சிந்தனையை ஏற்படுத்துகிறது

**சுவாமி சிவானந்தர்**

## திறப்புக்கோர்வை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பருத்தித்துறை வீதியில் உள்ள கல்வியங்காட்டுப் பகுதியில் திறப்புக்கோர்வை ஒன்று கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ள முடியும். (உ-...)

## இந்திய அரசிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவர்கள் மன்னார் கடற்பரப்பினுள் அத்துமீறி மீன் பிடிப்பதனால் மன்னார் மாவட்ட மீனவர்கள் பெரும் பாதிப்புக்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

இந்திய மீனவர்களின் இவ் அத்துமீறிய செயலை இந்திய அரசு கண்டிக்க வேண்டுமெனவும், இதனைக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனவும் மன்னார் மாவட்ட ஆயர் இராயப்பு யோசெப் இந்திய அரசைக் கோரியுள்ளார். (உ-8)

## கருத்தரங்கு

(தனங்கிளப்பு)

வெண்புறா நிறுவனத்தினால் பாடசாலைகள் தோறும் மிதிவெடி விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

இதற்கமைய யாழ்.கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் அண்மையில் இக்கருத்தரங்கு இடம்பெற்றது. (உ-37)

# திம்புள்ள பேருந்து விபத்தில்

# இரு மாணவர்உட்படமூவர்பலி

## 35 பேர் படுகாயம்

(கொழும்பு)

பயணிகளை ஏற்றிச் சென்ற பேருந்து ஒன்று திம்புள்ள குயிஸ் பெரிதோட்டத் தொழிற்சாலைக்கு அருகில் உள்ள பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் இரண்டு பாடசாலை மாணவர்கள் உட்பட மூவர் மரணமானதுடன் 35 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது. இலங்கைப் போக்குவரத்துச் சபையின் நாவலப்பிட்டி டிப்போவுக்குச் சொந்தமான இந்த பஸ் வண்டி பயன்பாட்டுக்குரிய நிலையில் இல்லை எனப் பல தடவைகள் முறையிடப்பட்டிருந்த போதும் அதிகாரிகளின் அசமந்த போக்கினாலேயே இவ்விபத்து இடம் பெற்றுள்ளது என தனக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக திம்புள்ள பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

காயமடைந்த 35 பேரில் 9 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

இவர்களில் நால்வர் கண்டி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஏனையவர்கள் திம்புள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு திம்புள்ள பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி செந்தில்வேல் தெரிவித்துள்ளார். (த-3)

---

## உயர் பாதுகாப்பு...

இருந்தது. இதனால் பலாலி விமானத் தளத்தின் பாதுகாப்பு வலயம் 6000 மீற்றர்களுக்கு விஸ்தரிக்கப்பட்டது.

தற்போதைய அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள யுத்தநிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட்டதும், உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் அடங்கும் நிலப்பரப்பு அவற்றின் சொந்தக்காரரிடம் மீளவும் ஒப்படைப்பதற்கு இராணுவம் எப்போதும் தயாராகவுள்ளது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் விடுதலைப்புலிகள் அமைத்துள்ள முகாமை அகற்றுமாறு யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு விடுதலைப் புலிகளிடம் கோரிய போதும் இன்றுவரை விடுதலைப் புலிகள் அந்த முகாமை அகற்றவில்லை என்று கூறிய பிரிகேடியர் மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் எந்தவொரு நாடும் தாம் வைத்திருக்கும் ஆயுதங்கள் சம்பந்தமாகவோ, இராணுவ வீரர்களின் எண்ணிக்கை பற்றியோ திருப்தியடைய மாட்டாது. ஒவ்வொரு வருடமும் 4000 இராணுவத்தினர் தமது பணியை விட்டு ஓடுகின்றனர். இவ்வாறு ஓடுகின்றவர்களை நாசகார சக்திகள் தம்முடைய சட்டவிரோத நடைமுறைகளுக்கு பயன்படுத்துகின்றன என்று குறிப்பிட்ட சரத் கருணாரட்ன அரசின் சமாதான முயற்சிகளுக்கு இராணுவம் ஒருபோதும் பாதிப்பை ஏற்படுத்த மாட்டாது என்றும் குறிப்பிட்டார். (ம)

---

## புலி உறுப்பினர்...

பொதுமக்கள் பொலிஸ் நிலையம் மீது கற்களை வீசி தாக்குதலை மேற்கொண்டனர்.

தாக்கப்பட்ட இருவரும் தம்மிடம் ஒப்படைக்கப்படவில்லை என பொலிஸார் தெளிவுபடுத்தியதை அடுத்து பொதுமக்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். மேற்படி சம்பவம் தொடர்பாக கண்காணிப்புக் குழு ஸ்தலத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. (த-14)

---

## மட்டு. அம்பாறை...

நிலை பாதிக்கப்படுதல் ஆகியவற்றைச் சுட்டிக்காட்டியே ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் உள்ள தமிழ்ப் பிரதேசங்களில் வியாபார நிலையங்கள தனியார் கல்வி நிலையங்கள் யாவும் மூடப்பட்டன.

அரசாங்க அலுவலகங்கள், நீதிமன்றங்கள், வங்கிகள் மற்றும் பாட, சாலைகள் எதுவும் இயங்கவில்லை.

வீதிகளின் குறுக்கே ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டும், மரக் குற்றிகள் போட்டும் தடைகள் ஏற்படுத்தப்பட்டமையால் உள்ளூர், வெளியூர் போக்குவரத்துச் சேவைகள் எதுவும் நடைபெறவில்லை.

பாதுகாப்புக் காரணங்களுக்காக கொழும்பு - வாழைச்சேனை புகையிரத சேவை வெலிக்கந்தையுடன் நிறுத்தப்பட்டது.

நேற்றைய கடையடைப்பு - ஹர்த்தால் காரணமாக இந்த மாவட்டத்தில் உள்ள தமிழ்ப் பிரதேசங்களின் இயல்புநிலை முற்றாக ஸ்தம்பிதமடைந்தது. (த)

---

## திருக்கோயில் கடலில்...

ணடியாக ஈடுபடுத்தப்பட்டனர். இதனை அடுத்து நேற்றுக் காலை 6.15 மணியளவில் சம்பவ இடத்திற்குச் சென்ற கடற்படையினர் கப்பலைச் சோதனையிட்டதுடன் அதனைத் திருகோணமலைத் துறைமுகத்திற்குக் கொண்டுசென்றனர்.

இச்சம்பவம் தொடர்பாகக் கருத்து வெளியிட்ட இராணுவப்பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரட்ண உக்கிரேன் நாட்டுக் கொடிபறக்க விடப்பட்டிருந்த மேற்படி கப்பல், ரங்கூன் துறைமுகத்தில் இருந்து மும்பாய்க்கு தானியப் பொருட்களை ஏற்றிச் சென்றதாகவும், எரிபொருள் தீர்ந்ததனாலேயே திருக்கோயில் கடலில் நங்கூரமிட்டிருந்தாகவும் கூறினார்.

இதேவேளை மேற்படி கப்பல் அவதானிக்கப்பட்டதையடுத்து அது பற்றி போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும் அறிவிக்கப்பட்டது. இக்கப்பல் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட கண்காணிப்புக் குழு இந்தக் கப்பல் விடயத்திற்கும் இலங்கைப் போர் நிறுத்த உடன்படிக்கைக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று தெரிவித்துள்ளது.

இதேவேளை, இக் கப்பல் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளது. (த)

---


**அமரர் வீரசிங்கம்**
**அவர்கட்கு எம் ஆத்மாஞ்சலி**

நினைத்த நேரமெல்லாம் தினைத்தனையும்
கோணாது விரும்பியவற்றை விரும்பியவாறு
பணிபுரிந்து மறைந்த

**அமரர் சிவசுப்பிரமணியம் வீரசிங்கம் அவர்கட்கு**

எம் இதயபூர்வமான ஆத்மாஞ்சலிகள்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

318, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்,
22.07.2003

அனுதாபத்துடன்
உரிமையாளரும், ஊழியர்களும்
க.கு. கந்தையாபிள்ளையும்
மைந்தரும் (7315)


## புனரமைக்கப்பட்ட பாடசாலைகள் இன்று கையளிப்பு

(கொழும்பு)

ஐரோப்பிய ஆணைக்குழுவின் உதவியுடன் யாழ்ப்பாணத்தில் உள்ள 55 பாடசாலைகளை புனரமைக்கும் திட்டம் முடிவடைந்துள்ளது.

ஜேர்மன் கைத்தொழில் ஒருமைப்பாட்டு நிலையத்தினால் ஆறு இலட்சம் யூரோ நாணய செலவில் இப்பாடசாலைகள் புனரமைக்கப்பட்டுள்ளன.

புனரமைக்கப்பட்ட பாடசாலைகள் புனர்வாழ்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனாவிடம் கையளிக்கப்படவுள்ளன. இந்நிகழ்வு யாழ்.பல்கலைக்கழக பிரதான விரிவுரைமண்டபத்தில் இன்று இடம் பெறவுள்ளது. இந்நிகழ்வில் ஐரோப்பிய ஆணைக் குழுவின் வதிவிட பிரதிநிதி ஒல்ட பில்சன் கலந்து கொள்ளவுள்ளார் (ந-5,77)

## புலமைப் பரீட்சை கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தரம்5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களின் நலன் கருதி யாழ் கல்வி திணைக்களத்தின் அனுசரணையுடன் இலவசப் புலமை பரிசில் கருத்தரங்கு இன்று தொடக்கம் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை காலை 8.30 மணி தொடக்கம் பி.ப 4.30 மணிவரை வெவ்வேறு பாடசாலைகளில் நடைபெறவுள்ளது.

இன்றைய கருத்தரங்கு ஆனைப்பந்தி ஆரம்பப்பாடசாலையிலும் நாளை யாழ்.இந்து மகளிர் ஆரம்பப்பாடசாலையிலும் 24 ஆம் திகதி கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையிலும் 25 ஆம் திகதி காரைநகர் இந்து ஆரம்பப் பாடசாலையிலும் நடைபெறவுள்ளது. இக்கருத்தரங்கில் கலந்து கொள்ள விரும்பும் ஏனைய பாடசாலையைச் சேர்ந்த மாணவர்கள் கருத்தரங்கு நடைபெறவுள்ள பாடசாலைகளின் அதிபருடன் தொடர்பு கொண்டு கருத்தரங்கில் பங்கு கொள்ளலாம் என தெரிவிக் கப்படுகிறது இக்கருத்தரங்கில புலமைப்பரிசில் கையேடுகளும் மாதிரி வினாத்தாள்களும் வழங்கப்படவுள்ளன. (ந-5)

## மாணவர் குழுக்களிடையே மோதல்

# களனிப் பல்கலைக் கழகம்

# மறு அறிவித்தல்வரை மூடப்பட்டது

(கொழும்பு)

களனிப் பல்கலைக் கழகம் நேற்றுப் பிற்பகல் 3 மணி தொடக்கம் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டதாக பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் திலகரத்ன கப்புகம்கே அறிவித்துள்ளார்.

விடுதிகளில் உள்ள சகல மாணவர்களும் உடனடியாக விடுதிகளை விட்டு வெளியேறுமாறு பணிக்கப்பட்டுள்ளது. அவர்கள் வெளியேறுவதற்காகப் போக்குவரத்து ஒழுங்குகளை பல்கலைக் கழக நிர்வாகம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

நேற்றும் நேற்று முன்தினமும் இரு மாணவர் குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதல்களையடுத்தே இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இம் மோதல் காரணமாக இரு மாணவர்கள் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மோதலில் ஈடுபட்ட மாணவர் குழுக்கள் வன்முறை நோக்குடையதாகக் காணப்படுவதாகவும், அவ்வாறான மாணவர்களைப் பல்கலைக் கழகததில் இருந்து நீக்குவதன் மூலம் வழமையான செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும் எனவும் துணைவேந்தர் தெரிவித்துள்ளார். (ந-5)

## சிறுவர் நிதியம் அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

இருதயம் மற்றும் நோய்களினால் பீடிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்குப் பணவசதியற்ற ஏழைச்சிறுவர்களுக்கு உதவும்முகமாக 'அரும்புகள் சிறுவர் நிதியம்' இன்று மாலை 4 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலை தாதியர் பயிற்சிப் பாடசாலையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது.

நிகழ்வில் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (த)

## உள்ளூராட்சி வார இறுதி நாளில்

# யாழ். மாநகரசபை ஊழியர்கள் 15 பேருக்கு கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் உளளூராட்சி வார நிகழ்வின் இறுதி நாள் நிகழ்வு நேற்று நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

மாநகர ஆணையாளர் இ.இராமலிங்கம தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் யாழ். மாநகர சபையில் நீண்டகாலம் சேவையாற்றிய 15 பணியாளர்கள் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

உள்ளூராட்சி வார நிகழ்வினை ஒட்டி நடத்தப்பட்ட பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி என்பவற்றில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

சிறப்பாகச் செயற்பட்ட மூன்று உளளூராட்சிக் கிளைகளுக்கு சிறப்புப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகள் மற்றும் மரம்நடுகை என்பனவும் இடம்பெற்றன. (த)

---

## இலங்கை...

சம்பந்தப்பட்டவர்கள். ஆனால், தமிழர்களுக்கு தனியான அரசொன்றை நிறுவுவதையே அடிப்படை நோக்கமாகக் கொண்டவர். தாம் யுத்தத்திற்கு செல்வதற்கு வேண்டிய ஆயத்தங்களுடனேயே இருப்பதாக இப்போதும் கூறிவருகின்றனர். சமரசப் பேச்சுக்கள் எல்லாம் அவர்களைப் பொறுத்த வரையில் தந்திரோபாய நடவடிக்கைகள் மட்டுமே.

புலிகள் போர் நிறுத்த ஒப்பந்தத்தை பயன்படுத்தி வடக்கு - கிழக்கு முழுவதும் தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்தும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். கடற்பரப்பிலும் தமது ஆதிக்கத்தை விரிவுபடுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். தமது கோரிக்கைகளை முன்வைக்காமலேயே அரசாங்கம் பிரேரணையை முன்வைக்க வேண்டும் என்று கோரிவருகின்றனர். இதன் மூலம் அரசு முன்வைக்கக் கூடிய ஏதேனும் பிரேரணைகளை தாம் விரும்பினால் ஏற்கவும் இல்லையேல் நிராகரிக்கவும் கூடிய வாய்ப்பை அவர்கள் தம்வசம் வைத்துக் கொண்டுள்ளனர்.

தாமே தமிழர்களின் ஏகபிரதிநிதிகள் என்பதை புலிகள் விடாப்பிடியாக கூறிவருகின்றனர். ஜனநாயக வழிகளில் செயற்பட்டுவரும் ஈ.பி.டி.பி போன்ற கட்சிகளை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அக்கட்சிகளின் தலைவர்களை ஒழித்துக்கட்டும் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். தமிழ் மதகுருமார்களும் புலிகளைப் பின்பற்றி செயற்படுவதாக அறிக்கைகள் கிடைக்கின்றன.

இத்தகைய போக்குகளால் புலிகளுடன் பேச்சுக்கள் நடத்தும் அதிகாரிகள் எரிச்சலூட்டப்படுகின்றனர். ஜனாதிபதி தலைமையிலான பொ.ஜ. முன்னணி சமாதானப் பேச்சுக்கள் தொடங்கிய காலத்தில் இருந்தே புலிகளுக்கு பிரதமர் வழங்கிவரும் சலுகைகள் பற்றி கடுமையான விமர்சனங்களை செய்து வருகின்றது. இலங்கையின் பௌத்தமத குருமார்கள் அண்மைக் காலங்களில் சமாதானப் பேச்சுக்களை வெளிப்படையாகவே எதிர்க்கத் தொடங்கியுள்ளனர்.

நல்ல நோக்கங்கள் ஒருபுறம் இருக்க, நோர்வே நாடு இலங்கையில் ஒருமைப்பாடு, அரித்துச் செல்லப்படும் நிலை ஏற்பட்டாலும் சமாதானத் தீர்வொன்றைத் தாம் ஏற்படுத்தி விடவேண்டும் என்று முயற்சிப்பதாகத் தெரிகின்றது. புலிகளும் அரசும் நடத்திய ஹக்கோன் பேச்சுக்களைத் தொடர்ந்து ''ஐக்கிய இலங்கையினுள் சுய நிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டி ஆட்சியை ஏற்படுத்த இரு தரப்பினரும் தமது பற்றுறுதியை வெளிப்படுத்தியுள்ளனர்'' என்று நோர்வே வெளியிட்ட அறிக்கையும் இதற்கு ஒரு உதாரணமாகும். இதற்குள் ஒரு புதிர் இருக்கிறது. புலிகள் சுய நிர்ணய உரிமையை எவ்விதம் வியாக்கியானப் படுத்தப் போகின்றனர். அந்த வியாக்கியானத்தை அரசாங்கம் தன் மனதில் வைத்திருக்கும் சமஷ்டி பற்றிய கருத்துடன் எவ்விதம் பொருந்திக்கொள்ளப்போகிறது என்பதே அதுவாகும். கண்காணிப்புக்குழு விவகாரங்களைச் செவ்வனே கையாளவில்லை. நோர்வே புலிகளுக்கு ஒலிபரப்பு நிலையமொன்றை வழங்கியுள்ளது.

இது இலங்கையின் தகவல் அமைச்சின் அதிகார வரம்பிற்குள் அலலாமல் தனியாக இயங்குகிறது, கண்காணிப்புக்குழுவின் தலைவர் ரெலவ்சன் போர்நிறுத்தத்தை நிலைக்க செய்யும் நோக்கில் பல யோசனைகளை முன்வைத்திருக்கின்றார், இவைகள் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்படுமாயின் புலிகள் இறைமையுள்ள ஒரு ஆட்சியின் தலைமைக்குள் வரமுடியும்.

அவரது யோசனைகளில் கடற்புலிகளை உணமையான கடற்படை பிரிவாக அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கடற்படையும் கடற்புலிகளும் ஒரு தரப்பினரின் கப்பல்களை மறுதரப்பினர் போக்கு வரத்துக்கு அனுமதிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இவைகள் புலிகளை ஒரு ஆட்சியின் தலைமையாக மாற்றுவதற்கு அனுமதிப்பவையாகும்.

நோர்வேயின் இந்த யோசனைகள் ரணில் விக்ரமசிங்காவை சிக்கலுக்குள் மாட்டிவிடும், இலங்கையின இறைமையின் தாற்பரியங்களை நோர்வே புரிந்திருக்கவுமில்லை. புலிகள் தனியானதும் இறைமையுடையதுமான ஒரு அடையாளத்தை கட்டங்கட்டமான ஒரு நடைமுறை மூலம் பெற்றுவிடலாம் என்பது பற்றி அது கவலைப்படவுமில்லை என்பது புரிகிறது.

ஜனநாயக் கட்சிகள் பிரதமரின் நடவடிக்கைகளைக் கண்டு அச்சமடைகின்றன. சமாதானப் பேச்சுக்களில் முடிவுகள் எதனையும் எடுக்காமல் அதனை நீட்டிக்கொண்டு சென்று ஜனாதிபதிக்கான தேர்தலை சந்திக்க பிரதமர் விரும்புகிறார். அதன்பின்பு சமாதான நடவடிக்கைகளில் இருந்து விலகிச் சென்று முன்பு போன்றே தமிழின எதிர்ப்பு நிலைப்பாட்டிற்கு ஐ.தே. கட்சி சென்றுவிடலாம். இவ்வாறு ஜனநாயக விரும்பிகள் அச்சமடைகின்றனர்.

தமிழர்களின் கோரிக்கைகள் பூரணமாக நிறைவு செய்யப்படாவிட்டாலும் நாட்டின் ஒருமைப்பாடு எவ்விதத்திலும் பேணப்படவேண்டுமென்பது அரசின் திட்டவட்டமான நிலைப்பாடு. அதுபோல தனிநாடு ஒன்றை அமைக்காமல் தமிழரின் அடிப்படை உரிமைகளை பாதுகாக்க முடியாது என்பது புலிகளின் நிலைப்பாடு. இந்நிலையில் இந்திய அரசு இந்த முரண்பாடுகளை களைவதிலேயே கருத்தை செலுத்த வேண்டும். இவ்வாறு இந்திய முன்னாள் தூதுவர் கே.என்.டிக்ஷித் தெரிவித்தார். (ம)